Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
※ பல் கட்டுவதற்கும்,
※ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
※ இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1639)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 15 (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:12

அரியாலை - தபால்கட்டைச் சந்தியில்

# இராணுவ பவல் கவசவாகனம் ஓட்டோவை மோதியது; ஆத்திரம் கொண்ட மக்கள் படையினர் மீது தாக்குதல்!



அரியாலையில் நேற்று இடம் பெற்ற மோதல்களைப் படம்பிடிக்க சென்ற போது படையினரின் தாக்குதலுக்குள்ளாகி காயமுற்ற செய்தியாளர்.

## மோதல்களில் ஐந்து பொதுமக்கள் காயம்

(அரியாலை)

**அரியாலையில் இராணுவத்தினரின் பவல் கவசவாகனம் வீதியால் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின்மீது மோதி - ஒருவர் காயமுற்றதையடுத்து அப்பகுதியில் பொதுமக்களுக்கும், படையினருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதல்களில் ஐந்து பொதுமக்களும் ஒரு பொலிஸாரும் கயமடைந்தனர்.**

**இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -**

அரியாலைப்பகுதியில் மாம்பழம் சந்திக்கும் - தபால்கட்டைச் சந்திக்கும் இடையில் இராணுவத்தினரின் பவல் கவசவாகனம், ஓட்டோவின் பின்புறத்தில் மோதியது. இந்த விபத்தில் ஓட்டோவில் வந்த பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த மாணிக்கம் மகேஸ்வரன் (வயது 40) என்பவர் காலில் படுகாயம் அடைந்தார். ஓட்டோச் சாரதி வெளியே பாய்ந்ததால் தப்பித்துக் கொண்டார்.

நேற்றுப் பிற்பகல் 4.13 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோ பலத்த சேதத்திற்குள்ளாகியது.

**படையினரும் பொலிஸாரும் குவிப்பு**

விபத்துச் சம்பவம் இடம்பெற்றதையடுத்து அப்பகுதியில் பெருமளவில் மக்கள் ஒன்றுகூடத்தொடங்கினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களுக்கு ஆத்திரமூட்டுவதுடன் படையினர் அமைதியை குழப்புகின்றனர்!

### யாழ்.மாவட்ட அரசியற்துறை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை மாம்பழம் சந்திப் பகுதியில் இராணுவக் கவச வண்டி, முச்சக்கரவண்டியை மோதிய சம்பவத்தையும், கடந்த வாரங்களில் இடம்பெற்ற விபத்துக்களையும் பார்க்கும் போது இராணுவம் வேண்டுமென்றே மக்களைச் சீண்டி, கோபமூட்டி, அமைதியைக் குழப்பும் முயற்சியில் இறங்குவதாகவே கருதவேண்டியுள்ளது என யாழ். மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

நேற்று கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்குச் சென்ற விடுதலைப் புலிகள், கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இது குறித்து அரசியற்துறையினர் மேலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

செய்தி சேகரிக்கச் சென்ற

## பத்திரிகையாளர் மீது தாக்குதல் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் நேற்று நடைபெற்ற அசம்பாவிதத்தின் போது, செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"உதயன்", "வலம்புரி", "தினக்குரல்" பத்திரிகைகளின் செய்தியாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் மீண்டும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது வன்மையாக கண்டிக்க வேண்டிய விடயமாகும். செய்தி சேகரிப்பதற்காக நேற்றைய தினம் அரியாலைப் பகுதிக்கு சென்ற செய்தியாளர்களுககு படையினர் வஞ்சகம் தீர்க்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து திரும்பிய 33 ஈழ அகதிகள் விடுதலை!

தமிழ் நாட்டிலிருந்து படகுகள் மூலம் தலைமன்னார் வந்த 33 அகதிகளை மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா விடுதலை செய்துள்ளார்.

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் கடற்படையினரால், 36 பேர் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் மூன்வரைத் தவிர ஏனையவர்கள் விடுதலைசெய்யப்பட்டதாகவும், தலைமன்னார் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

படகோட்டிகளான ஏனைய மூவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### லண்டனில் ஆபத்தான நிலையில் தமிழ் இளைஞன்

லண்டன் ஈஸ்ற்காம் நகரில் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை ஒரு மணியளவில் இலங்கைத் தமிழ் இளைஞரான இராஜன் (வயது 24) என்பவரை காரில் வந்த ஒரு குழுவினர் வெட்டி படுகாயப்படுத்தியுள்ளனர். கழுத்து, தலை மற்றும் உடலின் பல பாகங்களிலும் மோசமாக வெட்டப்பட்ட இவர் ஆபத்தான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு குண்டுவெடிப்பு சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் பிரதமரின் வாசஸ்தலத்திற்கு அண்மையிலிருந்த இரத்தினக்கல் வியாபாரி ஒருவர் வீட்டில் பணியாற்றிய வீட்டுப் பணியாளர் ஒருவர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் கொழும்பு - கோட்டை பொலிஸார் விமானப்படையிலிருந்து தப்பியோடிய நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

நேற்று மாலை கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட வேளை இவரை தொடர்ந்தும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (01)

## ஜே.வி.பி.-சுதந்திரக்கட்சி கூட்டணி ஏற்படுவதற்கு சாத்தியமில்லையாம்

### ஜனாதிபதியின் சகோதரி கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கு மிடையே கூட்டணி ஏற்படுவதற்த இடமேயில்லை என்று, ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரி சுனேதிரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இரு கட்சிகளுக்குமிடையில் கூட்டணி ஒன்று ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கொண்டுள்ள நிலைப்பாடு சரியானது என்றும் சுனேத்திரா கூறினார்.

'ராவய' பத்திரிகைக்கு சுனேத்திரா அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் இனவாத சக்திகளுக்கு, அநுரா இரையாகிவிட்டார் என்றும் கூறினார்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கலே சரியானது என்று, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ள போதிலும் ஜே.வி.பி அதனை நிராகரித்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையே பொதுவான கூட்டமைப்பு ஒன்று ஒரு போதுமே ஏற்படாது என்று நாம் நம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் நெற்செய்கைக்கு விடுதலைப் புலிகள் அனுமதி!

(மட்டக்களப்பு)


கல்குடா தொகுதியில் வாகனேரி, ஆலங்குளம், வாகரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாமுக்கு அண்மையில் அமைந்துள்ள காணிகள் தவிர, முஸ்லிம்களுக்குச் சொந்தமான அனைத்து காணிகளிலும், முஸ்லிம் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட, விடுதலைப் புலிகள் நேற்று அனுமதி வழங்கியுள்ளனர்.

இதற்கான தீர்மானம் நேற்றுக் காலை 10 மணியளவில் வாகனேரி பாடசாலையில் விடுதலைப் புலிகளுக்கும், பிரதேச முஸ்லிம் விவசாயிகளுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இம்முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா தலைமையிலும், முஸ்லிம்கள் சார்பில் - முஸ்லிம் பள்ளிவாசல் நிறுவனங்களின் சம்மேளனப் பிரநிதிகளும் கலந்துகொண்டனர்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# தலைசிறந்த வங்கி - 2003



# குளோபல் ஃபினான்ஸ்

## தொடர்ந்து 5 ஆவது வெற்றிகர ஆண்டில்!

பெருமை மிக்க சாதனை! மாபெரும் வெற்றி! நீங்கள் இவ்வாறான வெற்றிகள் எமக்குப் பழக்கப்பட்டுவிட்டன என்று நினைக்கலாம். வெற்றியின் முழுமையை எய்திய இந்நிலையிலே, அதற்குப் பங்களிப்புச் செய்த எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும், அனைத்து நலன் விரும்பிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நாம் தெரிவித்துக்கொள்வதுடன், எதிர்வரும் காலங்களிலும் அதிசிறந்த சேவையை உங்களுக்கு வழங்குவோம் என்று உறுதியளிக்கின்றோம்.

BEST BANK IN SRI LANKA
2003
5TH CONSECUTIVE YEAR
Rated by GLOBAL FINANCE

(சி-1671)

கொமர்ஷல் வங்கி
உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

# தடைசெய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளை யுத்தத்தின்போது இராணுவம் பயன்படுத்தியது

## கலாநிதி ஜேம்ஸ் அற்புதராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தத்தின்போது, படையினர் - தடைசெய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளைப் பயன்படுத்தியுள்ளனர் என சர்வதேச தெற்காசிய பங்களிப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜேம்ஸ் அற்புதராஜா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு டிரான்ஸ் ஏசியா ஹொட்டேலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார். அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து மேற்கொண்ட ஆய்வுகளின்படியே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது, தடைசெய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளை மக்கள் வாழும் பகுதிகளில் படையினர் உபயோகித்துள்ளனர். குண்டுவீச்சில் பாதிப்படைந்த கட்டடங்கள், வெற்றுச் செல்கள் என்பவற்றைப் பரிசோதனை செய்தபோதே, இந்த அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது.

ஆயுதங்கள், வெடிபொருட்கள் தொடர்பான விடங்களில் தேர்ச்சி பெற்ற ஒருவரே இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டார். இத்தகைய கிளஸ்ரர் குண்டுகளை மக்கள் மீது பிரயோகித்தமை, நுளம்பைக் கொல்ல கிளஸ்ரரைப் பாவித்தது போன்றதாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து எடுக்கப்பட்ட வெற்றுச்செல் கோதுகளை நாம் கொழும்புக்குக் கொண்டு வந்துள்ளோம். இது தொடர்பான மேலதிக ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேவேளை, விடுதலைப் புலிகள் கடந்தகாலங்களில் என்ன வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள் என்பது தொடர்பாக, வும் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையில் தற்போது ஆயுதங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இவை சாதாரண மக்களின் கைகளை அடைகின்றன. இலங்கையில் குற்றச்செயல்கள் அதிகரித்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சாதாரணமாக இலங்கையில் ஏ.கே 47 ரக துப்பாக்கி - நூறு அமெரிக்க டொலர்களுக்கும், சிறிய துப்பாக்கிகள் பத்து டொலருக்கும், கிரனைட் ஐந்து டொலருக்கும் கிடைக்கக்கூடியதாகவுள்ளது எனவும் அற்புதராஜா தெரிவித்தார்.

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் மேலும் ஒருவருடம் நீடிக்கப்படலாம்!

## ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் சேவைக்காலம் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்படும் என்றும், அதற்கான முடிவை ஜனாதிபதி எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தில் மேலும் ஒருவருடம் நீடிக்க, பிரதமர் உட்பட பல அமைச்சர்கள் விருப்பம் தெரிவித்தருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், ஜனாதிபதியின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. இதேவேளை, அவரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டால், பொலிஸ் தலைமையகத்தைச் சுற்றிவளைக்கப்போவதாக சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரத்ன கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இலங்கை முதலீட்டுச்சபையுள்ளது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

புலிகளின் கட்டுப்பாட்டிலேயே, இலங்கை முதலீட்டு சபை உள்ளது என்று, ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தினார்

விடுதலைப் புலிகளின் முகவராகச் செயற்படும் ஜக்கிய நாடுகள் சபையில், வதிவிடப் பிரதிநிதி சாள்ஸ் மகேந்திரனின் செயற்பாட்டில் ஐ.நா.சபை செயலாளரின் இலங்கை விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

கோபி அனானை கிளிநொச்சிக்கு அழைத்துச்செல்ல, மகேந்திரன் மேற்கொண்ட முயற்சியாலேயே ஐ.நா. செயலரின் விஜயம் ரத்தாகியுள்ளது என்றும், விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

சாள்ஸ் மகேந்திரனும், அவரது புதல்வரான முதலீட்டுச் சபைத் தலைவர் அர்ஜுன மகேந்திரனும் இலங்கையின் பொருளாதாரத்தை, விடுதலைப் புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இலங்கை முதலீட்டுச் சபை விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ளது என்றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்புக் குறித்து, நடைபெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசும் போதே விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் - சிறுவர்களைப் புனருத்தாரணம் செய்வதாகக் கூறிக்கொண்டு, விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சிகளைப் பெற அவர்களை அனுப்பிவைக்கின்றது.

கொழும்பு - விடுதலைப் புலிகளின பிரசித்திபெற்ற ஆயுதக் களஞ்சியமாக மாறிவருகிறது. இராணுவ நடவடிக்கையை விடுதலைப் புலிகள் ஆரம்பித்தால், மூன்று மணித்தியாலங்களுக்குள் திருகோணமலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்தார்.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல், அரசாங்கம் செயற்படுகின்றது. நாட்டுமக்களின் சுயகௌரவத்தை, இறைமையைப் பாதுகாக்கக்கூட, இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

# பிரதமர் ரணிலின் ஐ.நா. உரை நாட்டின் இறைமையைப் பாதித்தது!

## சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரையானது, நாட்டின் நிலையைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில், செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதில், தமது கட்சியினால், ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க ஜக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரையில். அமெரிக்க ஆதரவுக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும், பிரதமமந்திரி தெரிவித்த கருத்துக்கள் இலங்கையின் இறைமையைப் பாதிப்பதோடு, இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மீது நம்பிக்கையில்லாத் தன்மையை ஏற்படுத்தியுள்ளதாகவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# சுசந்திகாவையும் கணவரையும் கைதுசெய்யுமாறு நீதிவான் பணிப்பு

குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்கவையும், அவரது கணவரையும் கைதுசெய்யுமாறு மாளிகாவத்த மஜிஸ்ரேட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சமீபத்தில் நிகழ்ந்த வாகன விபத்துதொன்றின் பின்னர், அங்கக் குறைபாடுகளைக் கொண்ட இராணுவ வீரரைத் தாக்கி, அச்சுறுத்தல் விடுத்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு இருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகுமாறு இருவருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து, இருவரையும் கைதுசெய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனத் தெரியவருகின்றது.

(01)



இராணுவத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவுவிழா வைபவம் நேற்றுமுன்தினம் காலை இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்றபோது, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் எல்.பி.பலகல்ல அதிகாரிகளுடன் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.



திருமலையில் நடைபெற்ற 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவுதின நிகழ்விலிருந்து ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

# பொ.ஐ.மு. ஆட்சியில் ஏற்பட்ட இழப்புக்கள் இனிமேலும் தொடர இடமளிக்கமுடியாது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் இழப்புக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளதாகவும், இனிமேல் அவ்வாறான இழப்புக்களுக்கு இடமளிக்கமுடியாது என்றும், காணி அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீது பேசியபோதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆவேசமாகப்பேசி, உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்ப்பதன் மூலமாக, புண்ணாகி இருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. தறபோது தேவையற்ற மரணங்கள் எதுவுமே நாட்டில் இடம்பெறவில்லை.

இவ்வாறான யதார்த்தநிலையை உணர்ந்து பேசுதல் வேண்டும்.

20 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தத்தினால்- அழிவுகளும், உயிரிழப்புகளுமே முக்கிய நிகழ்வுகளாக இடம்பெற்றுள்ளன. பொருளாதாரம் உட்பட சகல முக்கிய சொத்துக்களும் இதனால் அழிந்து போய்விட்டன.

முக்கியமான பாதுகாப்பு கேந்திர நிலையங்கள் இந்த யுத்தத்தின்போது அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இழப்புக்கள், அழிவுகள் தற்போது இல்லை. இன்று நல்லதொரு சூழல் உருவாகியுள்ளது.

பாரிய அழிவுகளை உண்டாக்கிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. உணர்ச்சி மேலிடப் பேசும் சிலர், முன்னையநிலை மீண் டும் வரவேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர்.

நாட்டின் எதிர்காலத்தைச் சிறந்த முறையில் அமைப்பதற்கு சுயநலன்கள் பார்ப்பது வேண்டத்தகாத ஒன்று.

கடந்தகாலங்களில் எமது படையினரில் - 41 ஆயிரம் பேரை நாம் இழந்துள்ளோம். விடுதலைப் புலிகள்- 11 ஆயிரம் பேரையே இழந்துள்ளார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் அதிகமானது.

இவ்வாறானதொரு நிலை மீண்டும் தொடர இடமளிக்காது எதிர்க்கட்சியினர், ஜே.வி.பி. அடங்கலாகத் தமது உண்மைகளைச் சீர்படுத்திக் கொண்டு, அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் பொங்கு தமிழ் ஏற்பாடுகள்!

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ' தொடர்பான ஏற்பாடுகள பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் காலை பொங்கு தமிழ் பானை ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் பொங்குதமிழ் தொடர்பாக விளக்கமளித்து வருகின்றனர். நேற்றும் எழுத்தூர், தலைவன் கோட்டை, பனங்கட்டிக்கொட்டு, எமில்நகர் போன்ற கிராமங்களுக்குச் சென்று, பொங்குதமிழ் நிகழ்வு பற்றி விளக்கமளித்து வருகின்றனர். (201)

# பேச்சில் முஸ்லிம்களின் பங்கு; இந்திய அரசு கவனமெடுக்கும்!

## இந்தியத் தூதுவர் நிருபம் சென்

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பங்குகுறித்து, இந்தியா கவனம் செலுத்தும் எனத் தெரிவித்தார் இந்தியத் தூதுவர் நிருபம் சென்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் - கடந்த புதன்கிழமை இந்தியத் தூதுவரைச் சந்தித்துப் பேசிய பின்னரே, இவ்வாறு தெரிவித்தார் நிருபம் சென். இந்தியத் தூதுவரை, அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிய ஹக்கீம் - தலைமையிலான குழுவினர், வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பங்களிப்புத் தொடர்பாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

குறிப்பாக அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பினர்- தனித்தரப்பாகக் கலந்துகொள்வதை இந்தியா உறுதிசெய்ய வேண்டும் எனவும், அவர்கள் கேட்டுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர் இது தொடர்பாக இலங்கை அரசுடன், இந்தியா பேசி விரைவில் நல்லதொரு முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்ததையடுத்து, அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வழங்குநர் தொடர்பாக அறிவிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 உள்ளூராட்சி சபைகளின் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக, தங்களுக்கு அறியத்தருமாறு ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளையும் - உதவி உள்ளூராட்சிப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (91)

## கட்டடம் புனரமைப்பு

(வண்ணை)

யாழ்ப்பாண திருமறைக் கலாமன்ற பிரதான வீதி தலைமையக கட்டடம் நவீன கட்டமைப்புக்களுடன் புனரமைக்கப்படுகின்றது. புனரமைக்கப்படும் கட்டடம் மார்கழி மாதம் திருமறைக் கலாமன்றத்தில் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (111)

## நீண்டகாலமாக புனரமைக்கப்படாத வவுனிக்குளம்

(வடமராட்சி கிழக்கு)

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல், எதுவித பராமரிப்புமின்றிப் பாதிக்கப்பட்டுள்ள வவுனிக்குளத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என, இந்தக் குளத்தை நம்பிவாழும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளம் 3500 கலனைத் தேக்கிவைத்து, 6060 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கு நீரை வழங்கிவந்தது.

யுத்த அனர்த்தங்களால் குளத்தின் அணைக்கட்டுகள் அழிந்து உடைப்பெடுக்கத்தக்க நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## கலாசாரச் சுற்றுலா

(வண்ணை)

யாழ். திருமலைக் கலாமன்ற இளையோர் அவையினர் எதிர்வரும் 14 ஆம் திகதி சமூக உறவு மேம்பாட்டு கலாசார சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு, பல மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளனர்.

கொழும்பு, கண்டி, மன்னார், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, அப்புத்தளை ஆகிய இடங்களில் நிகழ்வுகளையும் நடத்தவுள்ளனர். (111)

## "கூலிக்கு வந்தவன்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய - "கூலிக்கு வந்தவன்" நூல் வெளியீட்டு விழா - நாளை மாலை 3.30 மணிக்கு ஆரியகுளத்தடியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - வெளியீட்டுரையைக் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும், ஆய்வுரையைக் கலைச்செல்வி ஆசிரியர் சிற்பியும், "நமது ஈழநாடு" ஆசிரியர் ச.இராதேயனும் நிகழ்த்தவுள்ளனர்.

## சிறுவர் தின நிகழ்வுகள்

சிறுவர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய சனசமூக நிலையத்தினர் நடாத்தும் மூன்று நாள் கண்காட்சியும், விசேட நிகழ்வுகளும் ஆனைக்கோட்டை உயரப்புலம் மகா வித்தியாலயத்தில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றுவருகிறது.

இன்று சிறுவர்களுக்கான பரிசளிப்பு வைபவ நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொள்ளவுள்ளார். (91)

## துடுப்பாட்ட இறுதிப் போட்டி

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி, இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து, ஜொனியன்ஸ் அணி மோதவுள்ளது.

ஜொலிஸ்ரார் அணி வீரர்கள் - எஸ்.லக்சுமிகாந்த், என்.சிவராஜா, என்.நாதன், எஸ்.மகேந்திரராஜா, எஸ்.கைலேஸ்வரன், எஸ்.கௌசீகன், ஆர்.கிருஸ்ணராஜா, வி.மணிவண்ணன், எஸ்.கோபிநாத், எஸ்.அருண்குமரன், கே.ராஜாதித்தன், எஸ்.தேவக்குமார், பீ.ஜெயரூபன், ஆர்.கபிலன், ஆர்.வரதன்

ஜொனியன்ஸ் அணி வீரர்கள்- வி.குமணன், வி.விஸ்ணுவர்த்தனன், சி.எம்.டினேஸ், பி.கஜரூபன், ரி.சி.அன்று, எ.கரேஸ், எம்.மயூரன், சி.எஸ்.வில்சன், எஸ்.ரஜீவன், வி.கிருஷாந்த், பி.சஜிந்தன், பி.லவேந்திரா, ச.அகிலன், எ.தனஞ்சயன்.

# அடக்கப்பட்ட பெண்கள் விடுதலைபெற்று புரட்சிப் பெண்ணாக உருவெடுக்க வேண்டும்!

## யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி



பெண்கள் - சமூகத்தில் சம உரிமைபெற்று, சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலைபெற்று, ஆண்களுடன் சமத்துவத்துடன் வாழக்கூடிய - புரட்சிகரமான பெண்களாக உருவாகவேண்டுமென, யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கயல்விழி தெரிவித்தார்.

கோப்பாய் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற 2 ஆம் லெப்.மாலதியின் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 2 ஆம் லெப். மாலதியின் நிகழ்வில் நாம் கலந்துகொண்டுள்ளோம். இந்த நிகழ்வுகள் எம்மக்களின் மத்தியில் வித்துக்களாக இடப்படவேண்டும். எங்களுடைய போராட்டமானது இத்தகைய நிலையை அடைந்துள்ளதென்றால், அது புலிகளின் போராட்டத்தின் மூலம்தான் ஏற்பட்டுள்ளது.

இன்றைய நாளை தேசியத் தலைவர் - தமிழீழப் பெண்களின் எழுச்சி நாளாக ஏற்படுத்தியுள்ளார். எமது சமூகமானது காலங்காலமாக - பாரம்பரியங்கள், மூடநம்பிக்கைகள், வழக்காறுகள் போன்றவற்றால் கட்டியெழுப்பப்பட்டு - அக்கட்டுக்கோப்பானது, கட்டாயமாக்கப்பட்டு அதற்குள்ளேயே பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

எனவேதான், இந்த நாள் - பெண்கள் தேசிய எழுச்சிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. சம்பிரதாயங்கள் மூலம் பெண்கள் அடிமைப்படுத்தப்படும் நிலை மாற்றப்படவேண்டும். எவ்வாறு பெண்கள் வாழவேண்டும், எவ்வாறு உருவாக்கப்படவேண்டுமென - வழிகாட்டியவர் எமது தேசியத் தலைவர். எம் சமூக அமைப்பிலிருந்து ஒரு பெண், போராளியாக மாற்றம்பெற்றது - சமூக அமைப்பில் ஒரு திருப்புமுனையாக மாறியுள்ளது.

இது நிரந்தரமான தாக்கத்தை ஏற்படுத்தினால்தான், எமது தேசவிடுதலை சாத்தியமானதாகமாறும். எனவேதான், பெண்களானவர்கள் அந்த சமூகத்தை உருவாக்கவேண்டுமாக இருந்தால், அந்தச் சமூகத்திலே வாழும் பெண்ணுக்குப் பெருந்தடைகளுண்டு. பெண்ணானவள் சரியாக வளர்த்தெடுக்கப்படுபவளாக இருந்தால், அநதச் சமூகத்திலே ஆளுமையுடன் தலைநிமிர்ந்து வாழ்வாள்.

பெண்கள் எழுச்சிநாளிலே எமது பெண்கள் ஒன்றினை உணரவேண்டும். காலங்காலமாக இப்படித்தான் வாழவேண்டும், இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நிலை மாறுவதற்கு வித்திட்டது - எமது விடுதலைப் போராட்டம்.

சர்வதேசத்திலே வாழும் ஒவ்வொரு பெண்களுக்கும்- எமது பெண்களின் விடுதலைப் போராட்டம் ஓர் முன்னோடியாகவுள்ளது. எமது சமூகத்தினால் உருவாக்கப்பட்ட கருத்தினை உடைத்தெறிய எமது போராட்டம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்தது.

பெண்களுக்கும், ஆண்களுக்கும் வேற்றுமைகாட்டாது, எமது தலைவர் சரியான முறையில் எமது போராளிகளை வழிநடத்துகின்றார். எமது செயலுக்கு - சமஉரிமை கொடுப்பதனால், நாமும் போராட்டத்திலே பல சாதனைகளைப் புரிந்துள்ளோம்.

எங்களாலும், எங்களுடைய தேச விடுதலைக்கு உழைக்கவேண்டுமென நாம் முனைந்திருக்கிறோம் என்றால், சமூகத்திலுள்ள பல சாதனைகள் உங்களுக்காக காத்திருக்கின்றது. எங்களுக்குள்ளேயே இருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தத் தடைகளைத் தாண்டி வெளிவரவேண்டும்.

பெண்கள் - ஆண்கள் என்ற வேறுபாடின்றி, சமூகத்திலே சம அந்தஸ்துள்ளவர்களாக இருக்க வேண்டும் என, கயல்விழி தனது உரையில் குறிப்பிட்டார்.

## பெண்களுக்கான யோகாசன வகுப்புகள்

இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சினால் நடாத்தப்பட்டுவரும் யோகாசன வகுப்புகளின் புதிய பிரிவுகள் - நாளை மறுதினம் பி.ப. 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிகள் - பெண் ஆசிரியரினால் பயிற்றுவிக்கப்படும்.

இந்த வகுப்பில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவுள்ள நாவலர் மணிமண்டபத்தில் வந்து பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.




மானிப்பாய் லியோ கழகத்தினரால் - அண்மையில் கச்சாய் சத்திய அம்மன் தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாட சாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் ஒரு மாணவி பாடசாலை உபகரணத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

# மடத்தடி விபத்துச் சம்பவம் தொடர்பாக மீண்டும் மீண்டும் பொய்களைக்கூறி நியாயப்படுத்த முயலவேண்டாம்

## யாழ்.மேலதிக நீதிவான் நந்தசேகரம்

மடத்தடி விபத்துச் சம்பவம் தொடர்பாக - மீண்டும் மீண்டும் பொய்யைக்கூறியே, அதனை நியாயமாக்க முயலவேண்டாம் என, யாழ்.பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு, யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை யாழ்.நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற வீதி விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பான கலந்துரையாடலின்போதே, இப்பணிப்புரை நீதிபதியால் விடுக்கப்பட்டது.

மடத்தடி விபத்தில் மரணமடைந்த இரு இளைஞர்களையும் உயிருடனேயே - தாம் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும், விபத்து நடந்த இடங்களிலிருந்து வாகனத்தை அகற்றக்கூடாது என எந்தச் சட்டமும் இல்லை எனவும் - பொலிஸ் அதிகாரி தெரிவித்ததையடுத்து, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

வைத்தியப் பரிசோதனை அறிக்கைகள் இளைஞர்கள் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டதாகத் தெரிவிக்கின்றன. இலங்கையின் சட்டவிதிகளுக்கு அமைய, விபத்து ஒன்று நடைபெறும்போது - அந்த இடத்திற்கு நீதிபதி வந்து விசாரணைகளை மேற்கொள்ளும்வரை வாகனங்களை அகற்றக்கூடாது. அதனைப் பொலிஸார் நன்றாக அறிந்திருந்தும், இந்தச் சம்பவத்தில் தவறாக நடந்து கொண்டுள்ளார்கள். நிலைமையைச் [illegible]ளிக்கமுடியுமெனப் பொலிஸாரும், இராணுவத்தினரும் எண்ணியே அவ்வாறு செயற்பட்டார்கள். அது இந்த விடயத்தில் முடியாமற்போய்விட்டது எனவும் நீதிபதி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக - பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பாடசாலை அதிபர்கள் காலைப் பிரார்த்தனைகளின்போது, மாணவர்களுக்குப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும். இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதங்களை - வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உடனடியாக அதிபர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

போக்குவரத்து விதிகள் அடங்கிய அறிவுறுத்தல்களைப் பாடசாலைகளின் விளம்பரப் பலகைகளில் இடுவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வீதி அறிவுறுத்தல் பலகைகள், பாதசாரிக் கடவைகள் என்பவற்றை - பல்கலைக்கழகம், பாடசாலை, சிறுவர் முன்பள்ளிகள் அமைந்துள்ள இடங்களுக்கு முன்பாக மிகவிரைவில் அமைக்கவேண்டும்.

போக்குவரத்து நெரிசல்கள்மிக்க சந்திகளின் நான்கு திசைகளிலும் உரிய வீதி அடையாளங்களையிடுவதன் மூலம் - சாரதிகள் வேகக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க உதவுதல் வேண்டும்.

தொலைத்தொடர்பு, நீர்விநியோகம் என்பவற்றிற்காகத் தோண்டப்பட்ட வீதிகளை - மிகவிரைவில் செப்பனிட வேண்டும் எனப் பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். இதற்குப் பதிலளித்த மாநகர ஆணையாளர் இராமலிங்கம் ஒருவார காலப்பகுதிக்குள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட நீதிபதி - வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர் விநியோக அதிகார சபை, தொலைத்தொடர்பு சேவையினர் ஆகியோர் இணைந்து பணியாற்றுவதன்மூலம், இந்தச் சிக்கலைத் தவிர்க்கமுடியுமெனத் தெரிவித்தார்.

ஓட்டோ சாரதிகள் அதிகமான குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருக்கிறார்கள். இதனைத் தவிர்ப்பதற்கு அனைத்துச் சாரதிகளும், ஓட்டோ சங்கத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என, நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். ஓட்டோ சங்கத்தினரால் அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பாகப் பாராட்டுத் தெரிவித்த நீதிபதி, அதனை அனைத்துச் சாரதிகளும் பெறவேண்டும் எனவும், சாரதிகளின் ஒழுக்கம் தொடர்பாகத் தீவிரமாக ஆராய்ந்த பின்பே சங்கம் அனுமதி வழங்கவேண்டும் எனவும், நீதிபதி ஓட்டோ சங்க நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் - மாநகர ஆணையாளர், வட பிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், மினிபஸ், ஓட்டோ சங்கத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பத்தாவது அகவையில்



பெயர் : சிவகௌரி மகேந்திரன்

முகவரி : கலைவாணி வீதி, வடலியடைப்பு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------

பெற்றார் ஒப்பம்

# உபாதைகளிலிருந்து விடுபடத் துடிக்கும் சச்சின்

உலகத் திசையெல்லாம் போற்றிப் பேசப்படும் அந்தச் சாதனை நாயகன் - இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம். கடந்த உலகக் கிணணப்போட்டியில், 673 ஓட்டங்களை எடுத்து, தனது சாதனையை முறியடித்துப் புதிய சாதனை படைத்த வீரன். ஒரு நாள் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களை எடுத்த வீரன் சச்சின் டெண்டுல்கர்.



வேதனையில் சாதனை

இத்தனை சாதனைகளுக்கும் பின்னால் மீளமுடியாத வலிகளினால் நொந்துபோய், வெந்துபோய் இருக்கிறார் என்றால் யார்தான் அதை நம்புவார்கள்.

30 வயது நிறைந்த, 14 வருட கிரிக்கெட் அனுபவம் உள்ள சச்சின்- தற்போது கால் பெருவிரலில் ஓர் என்புமுறிந்த காரணத்தால், மிக மிகக் கொடுமையான வலியை அனுபவித்து வருகின்றார். 'எனது இடுப்பு, கைகள் மற்றும் பாதம் என்பவற்றில் வலிகள் இருந்தாலும்கூட, அவை எனது விளையாட்டில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால், கால் பெருவிரல் ஒன்று முறிந்தநிலையில் இருக்கிறது.

இந்த வலிதான் நிறுத்தமுடியாமல் இருக்கிறது. அத்துடன், ஒரு கையை உறுதியாகப் பிடிக்கவும், துடுப்பெடுத்தாடும்போது கை விரல்களை இலகுவாக வளைக்கவும், தேநீர்க் கோப்பையைச் சுலபமாகப் பிடிக்கவும் முடியாதநிலையில் நான் இருக்கிறேன்'' என்று, அந்த வீரன் வேதனையோடு தெரிவிக்கின்றார்.

106 டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 8819 ஓட்டங்களைப் பெற்ற சச்சின் - 31 டெஸ்ட் செஞ்சரிகளைக் குவித்துள்ளதுடன், சுனில் கவாஸ்கர் அடித்த உலக சாதனையான 34 டெஸ்ட் செஞ்சரிகளைக் கடக்க, 3 செஞ்சரிகளே உள்ள நிலையில், ஆவலுடன் அதனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

அத்துடன், ஒருநாள் போட்டிகளில் 34 சதங்களுடன் 12,219 ஓட்டங்களைப் பெற்று, யாரும் இலகுவில் எட்டமுடியாத சாதனையைப் படைத்துள்ளார். 16 வயதிலிருந்தே கிரிக்கெட் உலகுக்குக் காலடி வைத்த சச்சினின் ஒவ்வொரு "சொட்" களும் அவருக்கே உரிய பாணியாகத்தான் அமையும். நான்கு திசைகளும் உடலைத் திருப்பி, லாவகமாக விளையாடும் சச்சினுக்கு, 1999 இல் பாகிஸ்தானுக்கு எதிரான "டெஸ்ட்" தொடரின்போது, இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது. அத்துடன், 2001 இல் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் - வலதுகால் பெருவிரல் என்பு ஒன்று முறிந்தது. இறுதியாக, கைவிரலிலும் காயம் ஏற்பட்டது.

ஆனாலும், கைவிரலில் காயம் ஏற்பட்ட நிலையிலும், கடந்த சில மாதங்களுக்கு முன் உலகக் கிண்ணத்தில் அற்புதமாக விளையாடி, 673 ரண்களைக் குவித்தார் என்றால், "வேத னையிலும் சாதனை..." என்பதற்கு அதுவே உதாரணம்.

உலகக் கிண்ணத்துக்குப் பின்னர், கடந்த மே மாதம் அமெரிக்கா சென்று, கைவிரலில் ஏற்பட்ட காயத்துக்குச் சத்திரசிகிச்சையைப் பெற்றுக்கொண்டு, 6 கிழமை ஓய்வுக்குப்பின், மீண்டும் விளையாடத் தொடங்கினார். தற்போது கால் பெருவிரல் காயத்தின் மத்தியிலும், நியூசிலாந்துக்கு எதிராக நடந்துகொண்டிருக்கும் டெஸ்ட் தொடரைப் பற்றிச் சச்சின் கூறுகையில் -

"எனது உடனடிக் கடமை நியூசிலாந்து டெஸ்ட் தொடரிலும் மற்றும் அவுஸ்திரேலியா- நியூசிலாந்து ஆகிய அணிகளுக்கு எதிரான முக்கோணக் கிண்ணத் தொடரிலும் நன்றாக விளையாடவேண்டும் என்பதேயாகும்.

அத்துடன், நாம் நிச்சயமாக நியூசிலாந்து அணியை, எமது மண்ணில் வைத்து வெல்ல வேண்டியிருக்கிறது. ஆனாலும், கடந்த ஆண்டு நியூசிலாந்து மண்ணில் நாம் அடைந்த படு மோசமான தோல்விகளுக்காக, அவர்களைப் பழிக்குப் பழிவாங்குவோம் என்ற கருத்தை நான் மறுக்கிறேன் என்று கூறிய சச்சின் டெண்டுல்கர், நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளை நிச்சயம் வெல்வோம் என்ற தன்னம்பிக்கையுடன் விளையாடுகிறார். ஆனாலும், இந்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள முதல் டெஸ்டில், முதல் இன்னிங்சில் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் Slips திசையில் பந்தைப் பிடிகொடுத்து, 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துள்ளார்.

இருந்தபோதிலும், கிரிக்கெட்டில் இவையெல்லாம் சகஜம்தானே என்று கூறும் இரசிகர்கள் - சச்சின் உடல் உபாதைகளிலிருந்து விரைவில் குணமடைந்து, மேலும் பல சாதனைகளை எட்டவேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றனர்.

- வீ. ஏ. கோபி




# இவர் சவாலின் முன்னே

நியூசீலாந்து அணி இதுவரையில், இந்தியாவில் ஒரு டெஸ்ட் தொடரை வென்றதாக வரலாறு இல்லை. தற்போது இந்தியா வந்திருக்கும் நியூசிலாந்து அணி- இம்முறை எப்படியாவது தொடரை வென்றேயாகவேண்டும் என்று கங்கணங்கட்டி நிற்கிறது. எனவே, இதற்கான திட்டமிட்ட விசேட பயிற்சிகளில் நியூசிலாந்து இறங்கியுள்ளது. முன்னதாகவே நியூசிலாந்தின் கிரைஸ்ட்சேர்ச், அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேன் ஆகிய நகரங்களில் - இந்திய விக்கெட்டுக்கள்போலவே அமைந்த தளங்களில் நிரம்பப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.



சௌரவ் கங்கூலி

எங்கள் முகாமில் உங்கள் சவாலா?

இந்த விடயங்கள் -இந்திய அணியின் தலைவர் கங்கூலிக்கு ஒருவித எரிச்சலை உருவாக்கியுள்ளதுபோலத் தெரிகின்றது. நீங்கள் உங்களுக்குத் தேவையானமுறையில் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால், களத்தில் எவ்வாறு செயற்படுகிறீர்கள் என்பதல்லவா முக்கியம் என்கிறார்.

மேலும், இவர்களின் பயிற்சிகள் எவ்வகையிலும் ஆட்டங்களை, இவர்களுக்கு இலகுவாக்காது என்று கூறுகின்றார் நியூசிலாந்து அணித் தலைவர் பிளெமிங் - முன்னதாக இவர் கருத்துக்கூறும்போது, இந்தியச் சுற்றுப்பயணமானது, அவுஸ்திரேலியச் சுற்றுப் பயணத்தைவிடக் கடினமானது என்று கூறியிருக்கிறார். இதே கருத்தைக் கங்கூலியும் கூறுகின்றார் . பிளெமிங் தன்னடக்கமாகக் கூறினார். கங்கூலி கூறுவது இறுமாப்புடன் கூறுவதுபோலத் தெரிகின்றது.

மேலும், கங்கூலி இந்திய அணி விளையாடிய ஒருநாள் போட்டிகள் அதிகரித்துவிட்டன. இதனால், அணியின் தரம் பாதிக்கப்படுகின்றது என்றும் கூறியுள்ளார். சராசரியாக நாற்பது ஒருநாள் போட்டிகள் வருடத்துக்கு ஒருமுறை அமைவது குறைக்கப்பட வேண்டும் என்கிறார். இதனையே சுனில் கவாஸ்கரும் கூறி, இந்தவிடயத்தில் ICC சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்கிறார். வருடத்திற்கு முப்பது ஆட்டங்களுக்கு மேல் ஒரு அணிக்கு இருக்கக்கூடாது என்பது கவாஸ்கரின் வாதம்.


ஜெப்ரி போய்கொட் முன்னாள் இங்கில[illegible]ின் புகழ்பூத்த வீரர். இன்றைய கிரிக்கெட் வர்ணனையாளர் இவர். தனது கருத்தாக கூடுதலான ஒருநாள் ஆட்டங்கள் - ஆட்டத்தின் மீதுள்ள ரசனையைக் குறைத்துவிடும் என்று கூறியுள்ளார். அதிகமான ஆட்டங்களைத் திணிப்பதன்மூலம், பொன் முட்டையிடும் வாத்தைக் கொல்லும் செயற்பாடே நடந்துகொண்டிருக்கிறது என்கிறார் போய்கொட்.

கடந்த வருடம் நடைபெற்ற ஒருநாள் போட்டிகள் பற்றிய தரவுகளைப் பார்க்கும்போது- தென்னாபிரிக்காவும், பாகிஸ்தானும் 38 ஒருநாள் ஆட்டங்களிலும், இந்தியா 35 ஆட்டங்களிலும், இலங்கை 32 ஆட்டங்களிலும், நியூசிலாந்து 31 ஆட்டங்களிலும், அவுஸ்திரேலியா 29 ஆட்டங்களிலும் பங்குகொண்டமையை அறியமுடிகின்றது.

தாமரை

# இது ஒரு விளையாட்டா....?

குத்துச்சண்டைப் போட்டிகள் சுவாரஸ்யமானவை என்பதில் சந்தேகமில்லை. இதேவேளை, குத்துச்சண்டைப் போட்டிகள் போன்ற விளையாட்டுகள் தடை செய்யப்படவேண்டும் என்ற கருத்தும்கூட உண்டு.



ஹொலிபீல்ட் புனர்ஜென்மம்

இன்றும்கூட உலகப் புகழ்பெற்ற முகமது அலி - பார்கின்ஸன் நோயால் அவதிப்படக் காரணம் - குத்துச்சண்டையில் அவர் வாங்கிய குத்துக்கள்தான் என்பது, எல்லோரும் அறிந்த உண்மை. திடீரென்று குத்துச்சண்டை பற்றிய சிந்தனை ஏற்படக் காரணம் உண்டு.

அண்மையில் அமெரிக்க லாஸ் வெகாஸ் நகரில் நடைபெற்ற ஜேம்ஸ் ரோணி மற்றும் ஹொலிபீல்ட் இருவருக்கும் இடையிலான குத்துச்சண்டைப் போட்டியின் ஒன்பதாவது சுற்றில், ஜேம்ஸ் ரோணியின், கையால் ஹொலிபீல்ட் சாவதிலிருந்து, இவரின் முகாமையாளர் காப்பாற்றினார் என்று செய்திகள் வருகின்றது. இதில் கிரிமினல் செயற்பாடுகள் ஒன்றுமில்லை. ஹொலிபீல்ட் விளையாட்டிலேயே செத்துவிட்டார் எனக் கதை முடிந்திருக்கும். குத்துச்சண்டைப் போட்டியின் ஆரம்பத்திலிருந்தே ஜேம்ஸ் ரோணி முன்னணியிலேயே இருந்தார். ஹொலிபீல்டால், ஜேம்ஸ் ரோணியின் குத்துக்களைச் சமாளிக்கவே முடியவில்லை.

ஒன்பதாவது சுற்றில் தாக்குதல் அதிகரிக்கவே, நிலைமையை உணர்ந்துகொண்ட ஹொலிபீல்டின் முகாமையாளர் ரேனர் - ஆட்டத்தை இடைநிறுத்தும்படி மத்தியஸ்தரிடம் கேட்டுக்கொண்டார். குத்துச்சண்டைக் களத்தில், நான்கு இளைஞர்கள் மரணமடைந்ததை நான் கண்டிருக்கிறேன். இன்னுமொரு அவலக் காட்சியைக்காண, நான் விரும்பவில்லை என்றிருக்கிறார் அவர்.

ஹொலிபீல்ட் சாமானியமானவர் அல்ல. நான்குமுறை உலகச் சாம்பியன் பட்டம் வென்றவர். இரண்டுமுறை மைக் டைசனை வென்றவர். இரண்டாவதுமுறை மைக் டைசன் - இவரது காதைக் கடித்து, ஒரு பகுதியை எடுத்ததும் ஒரு செய்தி.

ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபின், ரோணி கருத்துக் கூறுகையில் - ஹொலிபீல்ட் அற்புதமான வீரர் என்பதை நான் அறிவேன். ஆனால், நான் வெற்றித்தாகம் கொண்டவனாக இருந்தேன். அதுதான் அந்தளவு ஆவேசம் கொண்டேன். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்.



ஜேம்ஸ் ரோணி தவிர்க்க முடியவில்லையே

என்னதான் விளையாட்டு என்றாலும், உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்ற விளையாட்டு என்னும்போது, குத்துச்சண்டைப் போட்டிகள் பற்றிய அச்சவுணர்வொன்றே ஏற்படுகிறது.

- மதி

யாழ்.பல்கலைக்கழகம்

97, 98, 99, 2000 - பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணி அங்கத்தவர்.
1997 - சிறந்த வீராங்கனை.
1998 - உபதலைவி.
1999 - அணித்தலைவி.
2000 - மெய்வல்லுநர் தலைவி.
2001 - துரைராஜா நினைவுப் பரிசு வென்றவர்.
1990 - யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணியில் ஒருவர்.
1998 - வட.கிழக்கு மாகாண சாம்பியன் வலைப்பந்தாட்ட அணியில் வீராங்கனை.
1998 - தேசிய அணித்தெரிவில் ஒருவர்.
2002 - கொழும்பு சென்ற வலைப்பந்தாட்ட அணியின் தலைவி.
தெல்லிப்பளை கிறாஸ் ஹொப்பர்ஸ் கழகத்தின் அங்கத்தவர் - 90, 91, 92, 93, 94, 95, 99 தெல்லிப்பளை பிரதேச செயலக நிலையில், யாழ்.மாவட்ட சாம்பியன் அணியின் அங்கத்தவர்.
1991 - மஹாஜன 19 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியின் தலைவி, சிறந்த தொரு தடகள வீராங்கனை.

# மீண்டும் மீண்டும் எழுவேன்!



இந்த அங்கீகாரமே உச்சம்

லண்டன் சென்று திரும்பிய தாயக வலைப்பந்தாட்ட அணியின் ஒரு அங்கத்தவர் சந்திரமதி தவராஜா. அணியின் மூத்த உறுப்பினர், நிறைந்த அனுபவங்களைப் பல்வேறு விளையாட்டுத்துறைகளில் பெற்றுக்கொண்டவர்.

தற்போது சங்கானை பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்த



லண்டனில் மஹாஜனா

ராகக் கடமையாற்றுபவர். யாழ்.பல்கலைக் கழகத்தின் சிறப்புத் தமிழ் கலைப்பட்டதாரியும்கூட. படிப்பும், விளையாட்டும் இணைந்து செல்லமுடியும் என்பதற்கு இவர் ஒரு உதாரணம். இவரது அனுபவங்கள், கருத்துக்கள் எமது வீரர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எட்டாவது லண்டன் தமிழ்த்தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட எமது வலைப்பந்தாட்ட அணிவீரர்கள், வடக்கு - கிழக்கிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிறந்த வீராங் கனைகளாவர். லண்டன் தேசிய விழாவில் 'வெற்றி எமக்குத்தான் என்று நிச்சயித்தாலும், ஏனைய பலமான அணியினர் எமக்குச் சவாலாகவே அமைந்தனர். வேல்ஸ் அணி மற்றும் பிறிக்ஸ்ரன் அணியுடனான ஆட்டங்களில் நாம் பெற்ற வெற்றி என்பது, குறுகிய காலத்தில் எம்மை இசைவாக்கம் செய்துகொண்டமை, அணியின் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, நிலைமைக்கேற்ற வியூகங்கள் என்பவற்றின் இணைப்புத்தான் என்றும், உண்மையிலே மிகக்கடினமான அணிகள் அவை என்கிறார்.

யாழ்ப்பாணத்தின் வலைப்பந்தாட்டத்தின் நிலை பற்றிப்பேசும் போது, பாடசாலை மட்டத்திலும்சரி, கழக நிலையிலும்சரி உயர்தகைமையைக் கொண்டிருப்பதாகக் கூறும் இவர், சரியான பயிற்சிகள், வழிகாட்டல்கள், தெரிவுகள் இருந்தால், வட-கிழக்கு அணி தேசியரீதியில் இன்னும் ஐந்து வருடங்களில் முதன்மைபெறும் என்றும் நம்புகிறார்.

இதேவேளை - சில தினங்களுக்குமுன், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணியொன்று கொழும்பு புறப்பட்டிருக்கிறது. அதில், லண்டன் சென்று வந்த தாயக [illegible] திலிருந்து வீராங்கனைகள் யாருமே இடம் பெறவில்லை என்பதும், சட்டரீதியான தடைகள் ஏதும் இருந்திருக்குமா அல்லது யாழ். மாவட்ட அணியில் பங்குபற்ற ஒரு தொகுதி வீராங்கனைகள், வட-கிழக்கு மாகாண மட்டத்துக்கு ஒரு தொகுதி வீராங்கனைகள் என்று ஏதாவது ஒழுங்கிருக்கிறதா? (கிரிக்கெட்டில் தற்காலத்தில் இரண்டு அணிகள் இருப்பது போல) என்று வினாவினோம். இதற்குப் பதிலளித்த சந்திரமதி - அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. திறமைக்குத்தான் முக்கியத்துவம் என்பதே முதன் நிலையாக இருந்தால், தாயக அணியில் ஒருவராவது அந்நிலையில் இல்லையா என்று, அவர் மிகுந்த வேதனைப்பட்டார். எங்களுக்கும் தாயக அணி சார்ந்த ஒரு வீராங்கனையாவது, யாழ். மாவட்ட அணிக்குத் தெரிவாகும் சந்தர்ப்பம் இல்லாமற்போயிற்று என்பதுதான் புரியவில்லை.

தான் மகாஜனாக் கல்லூரியில் பயின்ற காலத்தில், எப்படியெல்லாம் அவமதிக்கப்பட்டோம் என்று நினைவுகூரும் சந்திரமதி - அதனையும் மீறி, ஏறத்தாழ பன்னிரண்டு பேர் வரையில் விளையாட்டில் ஈடுபாடு கொண்டோம். அத்தனைபேரும் இன்று நன்றாகவே வாழ்கிறோம். விளையாட்டு - வாழ்க்கையை மேம்படுத்தியதேயொழிய, சீரழிக்கவில்லை என்று பெருமிதமாகக் கூறுகின்றார். தனது பாடசாலைக் காலத்தில், தனது பயிற்றுநர் பாலா ஆசிரியர் (திருமதி.பாலசுப்பிரமணியம்), திருமதி. செல்வராஜா, தற்போது கிளிநொச்சி கோட்டக் கல்வி அதிகாரியாக இருக்கும் கணேசலிங்கம் ஆகியோர் என்றுமே மறக்கப்பட முடியாதவர்கள் என்று கூறும் சந்திரமதி, தமது அதிபர் (தற்போது ஓய்வுபெற்றவர்) நாகராஜா தமக்குத் தந்த உற்சாகம், ஆதரவு, பின்னூட்டல் என்பன பற்றி விலாவாரியாக எடுத்துக் கூறினார். இன்னொருவர், தமக்காக வீடுவீடாகச்சென்று நன்மை, தீமைகளை எடுத்துக்கூறி, விளையாட்டுப் பயிற்சிகளுக்கு அழைத்து வந்தவர். ஆனால், கண்டிப்பு நிறைந்தவர் றொகான் ராஜசிங்கம் என்கிறார்.

சந்திரமதி - விளையாட்டுத்துறை சார்ந்த உத்தியோகத்தர் என்பதால், உரையாடலைப் பல பக்கமாக நகர்த்திச் செல்ல முடிந்தது. பிரதேச செயலர்களுக்கு விளையாட்டுக்காக ஒதுக்கப்படும் பணம் போதாது என்று ஆதங்கப்படும் அவர், வட.கிழக்கு மாகாணசபை, கூடிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டும். அதுமட்டுமல்ல, பிரதேச செயலகப் பிரிவுகளில் மைதானங்கள் அமையாத பட்சத்தில், கிராமத்து இளைஞர்களுக்கு வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டே இருக்கும். நிறைய விளையாட்டு உபகரணங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், கிடைக்கும் நிதியோ மிகக்குறைவு.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பிரதேச செயலகங்களுக்கு நிறைய ஒதுக்கீடு செய்வார்களாயின், அது 'பருவகால மழை-பயிர்களுக்கு வாய்ப்பதுபோல' பரவலாக நிறைய விளையாட்டு வீரர்களைச் சென்றடையும் என்றும் கூறுகின்றார்.

இன்னொரு நியாயபூர்வமான சிந்தனைப்போக்கு, சந்திரமதியிடம் காணப்பட்டது. இது முக்கியமானதாகவே படுகின்றது. இன்றுவரை எத்தனையோ சவால்களுக்கு முகங்கொடுத்து, எத்தனையோ கசப்பான அனுபவங்களை எதிர்கொண்டு, சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டபோதுகூட, அதனையே சவாலாக எடுத்து வந்து, இன்று இந்த நிலையில் நானும், எனது சமகாலத்தவர்களும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.

விளையாட்டுத்துறைக்கு, எமது பங்களிப்பைச் செய்துகொண்டிருக்கிறோம். இன்று பலர் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய இளைய தலைமுறைக்காக நாம், எமது குரலை உயர்த்துகிறோமா? அவர்கள் பாதிக்கப்படும்போது, நாம் துணிந்து எந்தளவுக்குப் போராடுகிறோம். திறமை, தகுதிக்கேற்ற அங்கீகாரம் இளம் தலைமுறையினருக்குக் கிடைக்காதபோது, அதற்கெதிராகப் போராடியிருக்கிறோமா? எந்த மட்டத்திலும் தகுதியானவர்கள் சந்தர்ப்பம் இழப்பார்களாயின், அது சகித்துக் கொள்ளக்கூடியதல்ல என்பதே உண்மை. அதற்கு எல்லோருமே விழிப்புடன் இருப்பது மிக அவசியம்.

சந்திரமதியின் தங்கை காந்திமதியும் யாழ்வலைப்பந்தாட்ட அணியின் தலைவியாக இருந்தவர். மேலும், வட-கிழக்கு மாகாண அணியின் வீராங்கனையாகவும், தலைவியாகவும் இருந்தவர் என்பதையும், அவரும் ஒரு பட்டதாரி என்பதையும் உரையாடலினூடே அறிந்துகொள்ள முடிந்தது. சந்திரமதி - அணியின் மூத்த உறுப்பினர் என்ற வகையில், அணித தலைமைக்கான சந்தர்ப்பம் இருந்திருக்குமல்லவா என்றபோது, உரிய பருவத்தில்- உரிய பதவிகள், தகுதிகள் கிடைக்காமற்போன நோவின் சுவடுகள் இன்னமும் மனதில் வேதனையாகவே எஞ்சி நிற்கின்றன. அந்தவகையில், தாயக வலைப்பந்தாட்ட அணியிலுள்ள சின்னஞ்சிறுசுகளுக்கே, தலைமைப் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதில், எனது நிலை உறுதியானது. ஏனென்றால், இதுவே அவர்களுக்கான காலம் என்றும் கூறுகிறார்.

சந்திரமதி நிறைவான, செறிந்த சிந்தனைப்போக்குக் கொண்டவர் என்பதை, அவருடன் உரையாடியபோது நன்றாகவே புரிந்து கொள்ளமுடிகிறது. எமது இதயமான கிராமப்புறங்கள் - இன்றும்கூட விளையாட்டு வசதிகளைப் பெறுவதாயின், நகரத்தை நோக்கியே வரவேண்டியநிலை இன்றும் இருப்பதைக் காணக்கூடியநிலையில், அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் இயல்பாகவே துண்டிக்கப்படும்நிலை துரதிர்ஷ்டமானது. இதையிட்டே சந்திரமதி நிறையப் பேசினார்.

எனவே, நகரத்திலுள்ள வாய்ப்புக்கள (குறைவாக) இருந்தாலும்கூட, ஒளவில் திட்டமிட்டு, குடாநாட்டின் பல பாகங்களுக்கும் பரவலாகச் சென்றால், எமது கிராமப் பிள்ளைகள் விரைவாக முன்னேறும் சந்தர்ப்பம் இருக்கும் என்பதை அவர் வற்புறுத்திய போது, அதனை மறுக்கமுடியவில்லை. உண்மையும், திட்டமிடலும், நேர்மனப்பாங்கும், அர்ப்பணிப்பும் - அதேசமயம் எங்கள் மண்ணின் குழந்தைகள் என்ற உணர்வும் இருந்தால், சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். சந்திரமதியுடன் உரையாடிய பொழுதுகள் மிகவும் அர்த்தமுள்ளவையாக இருந்தன. சந்திரமதி போன்றவர்களுக்கு உற்சாகமும், உந்தலும் கொடுத்தால், எமது சிறார்கள் பல இலைமறை காய் நிலையிலிருந்து வெளி வருவார்கள்.

- நகுலன் - நிர்மலன்

# நாய் விற்றகாசு குரைக்காது

ஓய்வுபெற்ற கிரிக்கெட் வீரர்கள் பலர் இந்தியா பற்றிப் புகழ்ந்துபேசுவது, அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. இதிலும், அதிகமாக 'வெள்ளை' நாடுகளே முதன்மை வகிக்கின்றன. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஒரளவில் தென்னாபி



ரோணி கிரேய்க்
பணம் பத்தும் பண்ணும்

ரிக்காவும் இதில் அடக்கம். இவர்கள் எல்லாம் இந்தியத் தொலைகாட்சி நிறுவனங்களுடன், நேர்முக வர்ணனைக்காகப் பெருந்தொகைப்பணம் பெறுபவர்கள் அல்லது இந்திய ஊடகங்களுடனும், இந்தியக் கிரிக்கெட் சபையுடனும் தொழில்ரீதியாகத் தொடர்புகொண்டவர்கள்.

ஆனால், இதில் ஆச்சரியம் என்னவென்றால், இவர்கள் எல்லாம் தாம் கி[illegible] கெட் ஆடிய காலத்தில், இந்திய நாட்டின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தவர்கள்தான்.

அதாவது - உணவு வகைகள் பற்றிய புகார், போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை மட்டும் பெற்றுக்கொள்வதில் ஆர்வம், இந்திய மத்தியஸ்தர்கள் பற்றிக் கடும் ஆட்சேபம், கட்டுக்கடங்காத ரசிகர் கூட்டம் என்ற குற்றச்சாட்டு, வசதிகள் குறைவு என்பது, ஏன் தூசு நிறைந்த நாடென்றெல்லாம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள்தான் இவர்கள். ஆனால், தற்போது இந்தியா தமக்கு வளங்களை அள்ளித்தரும் போது, இந்தியப் புகழ் பாடத்தொடங்கிவிட்டார்கள். அது தவறல்ல. ஆனால், அளவுக்கதிகமாக இருப்பதுதான் நெருடலாக இருக்கிறது.

சில வாரங்களுக்கு முன், அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் டீன் ஜோன்ஸ், முரளியின் பந்துவீச்சுப் பற்றிக் குறிப்பிடுகையில், இவர் முறை தவறித்தான் வீசுகிறார் என்றும், அப்படித்தான் அநேகமான அவுஸ்திரேலியர்கள் கருதுகிறார்கள் என்றும் கூறியிருந்தார். ஆனால், இதே பிரச்சினைகள் இந்தியப் பந்துவீச்சாளர்களிடமும் இருந்தது. குறிப்பாக, ஹர்பஜன் சிங்கிடம் இருந்தது என்பதைக் குறிப்பிடத் தவறிவிட்டார்.

மிக அண்மையில் ஜோன்ஸ் தன் கருத்துக்கள்மூலம், இன்னும் தாழ்நிலைக்குப் போய்விட்டார். ஷேன் வோர்ண் ஊக்கமருந்து பாவித்து, ஒரு வருடம் சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்களில் தடைசெய்யப்பட்ட விடயம் தொடர்பாகக் கருத்துக் கூறும்போது, அவுஸ்திரேலிய வீரர்கள் எல்லோரும் ஊக்கமருந்துப் பாவனை தொடர்பில் சோதனைக்கு உட்படுத்தப்படுபவர்கள்தான் என்றும், அதேபோல அவுஸ்திரேலியாவிற்குள் வரும் கிரிக்கெட் வீரர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்றும், ஆனால் அவர்கள் ஊக்கமருந்து பாவித்திருக்கச் சந்தர்ப்பம் இருக்கக்கூடும் என்றும் கூறிக்கொண்டு வந்தவர் தான், ஸ்ரார் ஸ்போட்ஸ் தொலைக்காட்சியில் நேர்முக வர்ணனையாளர் என்பது நினைவு வந்ததும், "இந்திய வீரர்கள் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை" என்று பல்டி அடித்தார்.

இலங்கை பற்றி இந்திய ஊடகங்களில் கருத்துக்கூறிய இன்னொருவர், அவுஸ்திரேலிய பொபி சிம்சன். இவர் சந்தேகத்துக்கிடமான பந்துவீச்சுப் பற்றி மிகவும் விமர்சிப்பவர். இந்தவகையில், 'இந்து'ப் பத்திரிகையில் முரளியையும் மறைமுகமாகத் தாகக்கும் கட்டுரையொன்றை இவர் எழுதியிருந்தார். ஆனால், லங்காஷயர் கவுன்ரி அணிக்கு முரளி ஆடிக்கொண்டிருந்த வேளையில், இவர் தான் அந்த அணியின் பயிற்றுநர். அந்த வேளையில், முரளி பற்றி இவர் மூச்சுக்கூட விடவில்லை.

இன்னொரு பெரிய பகிடி - ஜெப்ரி போய்கொட் நடந்துகொள்ளும்முறை. இவர் சச்சினையும், கங்கூலியையும் வானளாவப் புகழ்கிறார். அத்துடன், இந்தியப்பாணி உடைகளை அணிய விரும்புவதாகவும் கூறுகின்றார். கடந்தவார தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில், கங்கூலியை கல்கத்தாவின் இளவரசர் என்று புகழ்ந்திருந்தார். இதெல்லாம் இந்திய நேர்முக வர்ணனையாளர்கள், தொழில் வழங்குநர்கள் போன்றவர்களின் நற்பெயரைப் பெற்றுக்கொள்ள மேற்



ஜெப் போய்கொட்
பதினொன்றுகூடப் பண்ணுமுங்க

கொள்ளும் நடவடிக்கைகள்தான். இலங்கைக்கும் ஆதரவாளர்கள் இல்லாமலில்லை. இன்று ரோணி கிரெய்க் இலங்கை பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்.

ஆனால், இலங்கை டெஸ்ட் அந்தஸ்த்துப் பெற்ற ஆரம்பகாலத்தில், இலங்கையைக் கொச்சைப்படுத்தியவர் இவர். அதுமட்டுமல்ல, உலகக் கிண்ணப்போட்டிகள் 1975 இல் ஆரம்பித்தபோது, இலங்கை அப்போட்டிகளில் பங்குபற்றுவதை எதிர்த்தவரும் இவர்தான்.

நன்றி - றெக்ஸ் கிளமன்டைன

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### பேரினவாதம் தேசபக்தியாகாது!

கடந்த சிலவாரங்களாக தென்பகுதியில் பேரினவாத சமாதான விரோத சக்திகளின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஜே.வி.பியினரின் தலைமையிலான, அரசுக்கும் இடைக் கால நிர்வாக யோசனைகளுக்கும் எதிரானதும், சமாதான நகர்வுகள், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான கருத்துக்கள் ஆகியனவற்றிற்கு விரோதமானதுமான 'இனவாத விஷவித்தை' தென்பகுதி மக்களிடையே தூவி இன்கலவரம் ஒன்றை உருவாக்கும் மூலோபாய முனைப்புடன் கூடிய பாதயாத்திரை நடவடிக்கைகளில் இருந்து மூர்க்கங்கொள்ளத் தொடங்கியுள்ளன. தமிழ் மக்களுக்கு எதிரான இந்தக்குரல் தனது விசமத்தனமான பொய்களை அச்சுறுத்தலாக்கி, தென்னிலங்கையிலே குழப்பத்தை விளைவிக்க முயன்றுவருவதாக நோக்கர்கள் தமது அச்சத்தை வெளிப்படையாகவே கூறியுள்ளனர்.

அரசியல் அரங்கில், ஜனநாயக ரீதியில், நியாயபூர்வமான அணுகு முறைகளின் மூலம் மக்கள் மனதை வென்றெடுக்கும் மனோவலிமை அற்றவர்களின் - கருத்தியல் பலவீனமானவர்களின் இத்தகைய நடவடிக்கையானது, நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு எதிரான மனித நேயமும், நியாயமற்றதுமான போரிற்கு முகம் கொடுத்து நைந்து சிதைந்து போயுள்ள ஒரு சின்னஞ்சிறிய தேசத்தினை முற்றாக நிர்மூலமாக்கி ரசிக்க நினைக்கும் குரூர அரசியல் சிந்தனை கொண்டோரின் செயற்பாடாக மட்டுமே கருதமுடியும்.

இவர்கள் அனைவரும் இவர்களைப் போன்ற இனவாத - மதவாத சிந்தனை கொண்ட, சொற்பமான ஆனால் வெறித்தனமான, அரசியல் செயற்பாட்டினைக் கொண்ட கும்பலை மட்டுமே தம்பின்னால் அணிதிரட்டிக் கொண்டு கோஷம் போடுகின்றவர்கள் என்பதும் நன்கு தெரிந்த ஒரு விடயம்தான்.

எனினும், இவர்கள் ஆபத்தானவர்கள், மனிதகுலத்திற்கே விரோதிகள், அது மட்டுமல்ல அற்பத்தனமான அரசியல் அபிலாஷைகளையும் கொண்டவர்கள். இதனை பெரும்பான்மை சமூகத்தவர்களும் உணர்ந்து கொண்டேயுள்ளனர்.

இத்தகைய பல கும்பல்கள் (இவைகளை அரசியல் கட்சிகள் என்ற பட்டியலில் அடக்கிவிட முடியாது) இன்று சிறிலங்காவின் எதிர்காலத்தை அரசியல் ஸ்திரத்தன்மையை, சமாதான முன்னெடுப்பை தீர்மானிக்கும் சக்திகளாக தம்மை பெருமளவில் பிரகாரம் செய்து மக்களைக் குழப்பிவருவதுதான் ஆபத்தானதாகும்.

ஜே.வி.பி., சிஹலஉறுமய, தேச பக்தர்கள் முன்னணி, பிக்குமார்முன்னணி, சிங்கள ஜனதா வியாபாரய, பூமிபுத்திரக் கட்சி... என்று தனித் தனிக் குழுக்களாக இயங்கும் இத்தகைய கும்பல்களின் பட்டியல் மிக நீளமானது.

பெரும்பாலும் இவர்கள் அனைவருமே தேர்தல்களின் போது, பொதுமக்களின் ஆதரவினை மிக மிக சொற்ப அளவிலேயே பெற்றுக்கொண்டு, விகிதாசாரதேர்தல் முறையின்கீழ் அதிஷ்ட வசமாக ஓரிரு உறுப்பினர்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யவைக்கும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் என்பது தான் உண்மை.

எனினும், ஸ்திரத்தன்மை குறைந்த சிறிலங்காவின் அரச பீடத்தில் இத்தகையோர் தம்மை அதிகாரத்தில் உள்ளவர்களின் தேவையின் அவசியத்தை முன்னிட்டு பேரம் பேசும் சக்திகளாக உருவாக்கிக் கொண்டுள்ளமை தான் அனைத்து ஆபத்துக்களுக்கும் காரணம்.

குரங்குபாஞ்சான் விவகாரத்தை அரசு தீர்க்காவிட்டால அதாவது விடுதலைப்புலிகளின் முகாமை அகற்றாவிட்டால், தாம் படையெடுத்து அதனை அகற்றுவோம் என சிஹல உறுமய புலம்புவதற்கும், இடைக்கால நிர்வாக சபையை புலிகளுக்கு வழங்கினால் அரசுக்கு எதிராக தீவிரமாகப் போராடுவோம் என ஜே.வி.பி எச்சரிப்பதற்கும், நோர்வேயை சமாதான முன்னெடுப்புகளில் இருந்து அகற்றுமாறு அரசை, பிக்குகள் முன்னணி நிர்ப்பந்திப்பதற்கும்... இந்த அரசியல் சந்தர்ப்பவாத சக்திகளின் தனிப்பட்ட சுயநல அபிலாஷைகளே காரணம்.

இதற்கு அவர்கள் 'தேசபக்தி' என்ற முலாம் பூசி மாற்ற முயல்வதை அறியாது தென்னிலங்கையின் பெருன்பான்மையின அப்பாவிகள் அவர்களை நம்ப முயல்வதுதான் இன்றும் அபாயகரமானதாகும்.


இன்றைய சிறிலங்காவின் அரசியல் யதார்த்தம் இதையே உணர்த்தி நிற்கிறது. பிரதான சிங்களக் கட்சிகள் இந்த யதார்த்தத்தை நன்கு புரிந்துகொண்டுள்ள போதிலும் அவர்களின் அரசியல் இப்படியே தொடர்வதற்கு ஏதோ ஒரு வகையில் இவர்களின் நடவடிக்கைகளும் தேவைப்படுவதால் இவற்றைத் தெரிந்தும் தெரியாமல் அவதானித்தும், ரசித்தும் கொள்கின்றனர். இதுவே எதிர்கால பிரச்சினைகள் அனைத்திற்கும் காரணமாகப் போகிறது.

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் விருது பெறத் தெரிவு செய்யப்பட்டோர்

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் விழா இன்று பி.ப. 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் தேசியரீதியிலும், பிராந்தியரீதியிலும் விருது பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் விபரம் வருமாறு,

**எஸ்.நடராசா (பிரதம ஆசிரியர், வீரகேசரி)**



இவர் 1956 நவம்பரில் வீரகேசரி நிறுனத்தில் விளம்பர மொழிபெயர்ப்பாளராக இணைந்தார். 1960 இல் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1984 இல் செய்தி ஆசிரியரானார். 1997 இல் வீரகேசரியின் பிரதம ஆசிரியரானார்.

கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் இணைந்ததன் பின்னர் அங்கு நடைபெற்ற உலக ஊடகவியலாளர் மாநாட்டிற்கும், 1981 இல் இந்தியாவில் நடைபெற்ற உலக தமிழாராட்சி மாநாட்டுக்கும் சிறப்புச் செய்தியாளராகச் சென்றிருந்தார்.

**செல்வி சற்சொரூபவதிநாதன் (சிரேஷ்ட ஒலிபரப்பாளர்)**



1965 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் அறிவிப்பாளராகி, பின்னர் முதலாம்தர செய்தி வாசிப்பாளராக நீண்டகாலம் பணியாற்றியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்சேவை, ஆங்கிலசேவை, கல்விச்சேவை, செய்திப்பிரிவு என்று பல்வேறு துறைகளிலும், பொறுப்பான பதவிகளை வகித்தவர். ஆங்கில சேவையில் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராக கடமையாற்றிய பெருமை இவருக்கு உண்டு. தொடர்ந்து 38 ஆண்டுகளாக செய்தி வாசிக்கும் ஒரே ஒரு தமிழ் ஒலிபரப்பாளர் இவராவார். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலும், சுயாதீன தொலைக் காட்சியிலும் நிகழ்ச்சிகளை வழங்கிவருபவர். விஞ்ஞான பட்டதாரியான இவர், மலேசியாவில் ஒலிபரப்புப் பயிற்சியை மேற்கொண்டவர்.

**திரு.வீரகத்தி தனபாலசிங்கம் (செய்தி ஆசிரியர், தினக்குரல்)**



1977 இல் ஒப்புநோக்குநராக வீரகேசரியில் சேர்ந்து தனது பத்திரிகை வாழ்க்கையை ஆரம்பித்தவர். 1985 இல் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியரானார். வெளிநாட்டு செய்திகளை கையாண்டு வந்த இவர், 1988 தொடக்கம் 1994 வரை நாடாளுமன்ற செய்தியாளராகப் பணியாற்றினார். வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் கட்டுரைகளை புனைபெயரொன்றில் எழுதிவந்தார். வீரகேசரி ஆசிரிய பீடத்தில் 13 வருடங்கள் பணியாற்றிய பின்னர் 1997 சித்திரையில் தினக்குரல் ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் செய்தி ஆசிரியராக பதவி ஏற்று இன்றுவரை பணியாற்றி வருகிறார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

**திரு.பொன்னையா ஜெயராஜ் (பிரதம ஆசிரியர் - ஈழநாதம்)**



ஈழமுரசு பத்திரிகையில் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தார். பின்னர் யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பத்திரிகை ஆரம்பித்தபோது, அதில் சேர்ந்து கொண்டார். பின்னர் சில மாதங்களில் பிரதம ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வன்னியில் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு தகவல்களை வழங்கும் ஒரேயொரு அச்சு ஊடகமாக ஈழநாதம் திகழ்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்தும் வன்னியிலிருந்தும், ஈழநாதம் தினசரிப் பத்திரிகையை கிரமமாக வெளிக்கொண்டு வருவதற்கு தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர்.

யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை சிறப்புப் பட்டதாரியான இவர், பின்னர் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

**இராசையா செல்வராஜா (பிரதம செய்தி ஆசிரியர்)**



1973 இல் லேக்கவுஸ் பத்திரிகையின் அவிசாவளை நிருபராக பத்திரிகைத்துறை வாழ்க்கையை ஆரம்பித்த இவர், 1977 இல் தினபதி அலுவலக செய்தியாளரானார். 1987 இல் தினபதியின் பதில் செய்தியாசிரியராக பதவி உயர்வு பெற்றார். 1990 இல் தினபதி நிறுவனம் மூடப்பட்டதையடுத்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன செய்திப்பரிவில் கடமையாற்றினார். இரு மாதங்களின் பின் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் இணைந்து கொண்டார். வீரகேசரியில் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்த பல கட்டுரைகளையும் எழுதிவந்தார். 1998 இல் மகாராஜா கூட்டுநிறுவனத்தின் சக்தி எப்.எம். செய்திப்பிரிவின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

**சின்னத்துரை தில்லைநாதன் (யாழ்.மாவட்டம்)**



யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்த ஈழநாடு பத்திரிகையின் நெல்லியடி செய்தியாளராக 1970 ஆம் ஆண்டு சேர்ந்து கொண்ட இவர் 1972ஆம் ஆண்டு வீரகேசரியின் புலோலி நிருபராக நியமனம் பெற்றார். அக்காலப்பகுதியில் வீரகேசரியின் வயதில் குறைந்த நிருபராக இவரே விளங்கினார். 1987இல் இவர் பருத்தித்துறை உடுப்பிட்டி தொகுதிகளை உள்ளடக்கிய வடமராட்சி நிருபராக வீரகேசரி நியமித்தது.


தற்போது வீரகேசரி, சக்தி எப்எம், உதயன் ஆகியவற்றின் செய்தியாளராக உள்ளார்.

**தம்பு வீவேகராசா (வன்னி மாவட்டம்)**



யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்த ஈழநாடு பத்திரிகையின் வவுனியா நிருபராக 1978இல் தனது பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தார். அதன் பின்னர் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களின் வவுனியா செய்தியாளராக பணியாறறிவருகிறார். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என பல துறைகளிலும் பணியாற்றிவருகிறார்.

**காந்தமுத்து இரத்தினலிங்கம் (திருகோணமலை மாவட்டம்)**



1977இல் வீரகேசரி நிருபராக பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்த இவர் 26 வருடங்களாக பணியாற்றி வருகிறார். பி.பி.ஸி. தமிழோசை உட்பட வெளிநாட்டு வானொலி தொலைக்காட்சிகளுக்கும், அவ்வப்போது செய்திகளை வழங்கி வந்திருக்கிறார். கட்டுரைகள், சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார்.

**இராசநாயகம் உதயகுமார் (மட்டக்களப்பு மாவட்டம்)**



பாடசாலை மாணவப் பருவத்திலேயே சுதந்திரன் பத்திரிகைக்கு எழுத ஆரம்பித்த இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்த ஈழநாடு பத்திரிகையின் மட்டக்களப்பு செய்தியாளராக 1977 இல் நியமனம் பெற்றார். இதனையடுத்து உள்ளூர் சர்வதேச ஊடகங்களுக்கு மட்டக்களப்பு செய்தியாளாக கடமையாற்றி வருகிறார்.

**எல்.எம்.சலீம் (அம்பாறை மாவட்டம்)**



1966 இல் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தார். இலங்கையின் முன்னணி தமிழ் தினசரிகள், வானொலிகளின் செய்தியாளராக பணியாற்றிவருகிறார்.

தினபதி.பாசறையில் புடம்போடப்பட்ட பத்திரிகையாளர்களில் இவரும் ஒருவர். பல சமூகங்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் எந்த அரசியல் கட்சிகள் குழுக்களின் பக்கமும் சாராது நடுநிலையாக நின்று செய்திகளை எழுதி வரும் செய்தியாளர் என்ற பெருமை இவரையே சாரும் இதனால், அவர் மீது பத்திரிகை ஆசிரிய பீடத்தில் உள்ளவர்களும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் நன்மதிப்பை கொண்டிருக்கின்றனர்.

**பழனி தங்கவேல் (மலையகம்)**

பத்திரிகைத் துறையில் 33 வருட அனுபவத்தைக் கொண்ட இவர், வீரகேசரியில் 23 வருடங்களாக பிராந்திய செய்தியாளராக பணியாற்றி வருகிறார். மலையக மக்களின் அரசியல் சமூக பிரச்சினைகளை வெளிக்கொண்டுவந்ததில் இவருக்கு பெரும் பங்குண்டு.

# பிரித்தானியாவின் சட்டச்சங்க தலைவராக ஈழத்தமிழர் தெரிவு

பிரித்தானியாவின் மிடில் செக்ஸ் சட்ட சங்கத்தின் தலைவராக ஈழத்தமிழர் அரியஸ்ரீகரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரித்தானியாவில் முன்னணி வகிக்கும் சட்டத்துறை சார்ந்த சங்கங்களில் மிடில் செக்ஸ் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சங்கத்தில் பிரித்தானியாவைச் சேர்ந்த பல பிரபலமான சட்டத்தரணிகள் அங்கம் வகிக்கின்றனர். ஐக்கிய இராச்சியத்தில் பணிபுரியும் சிறுபான்மை இனங்களைச்சேர்ந்த பல சட்டத்தரணிகளும், சங்கத்தில் அங்கத்தவர்களாகவுள்ளனர்.

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அரியஸ்ரீகரன் பருத்திதுறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன் ஆவார். 1978 ஆம் ஆண்டு இலங்கையில் சட்டக்கல்வியை முடித்து பின்னர் பிரித்தானியா சென்றார். அங்கு 1983 ஆம் ஆண்டு இங்கிலாந்து சட்டத்துறையை கற்று அங்கு சட்டத்தரணியாக பதவிவகித்தார்.

இச்சங்கத்தில் 16 வருடங்களுக்கு மேல் அங்கத்தவராக இருந்த ஸ்ரீகரனின் பாரியார் ரேணுகாவும் ஒரு சட்டத்தரணி என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய உயர் ஸ்தானிகரை சந்தித்தனர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னை நேற்று முன்தினம் சந்தித்து பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளிடம் அரசு சமர்ப்பிக்க உத்தேசித்திருக்கும் இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு, சமாதானப் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்குபற்றுவது உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக, கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய அரசுக்கு தெரியப்படுத்துவதாக தெரிவித்த நிருபம் சென், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் இலங்கை வரும்போது, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்துள்ளார். (01)

# தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில்



இலங்கையின் சமாதான முன்னகர்வுகளின் முக்கிய கட்டம் ஒன்று இன்னும் இரண்டொரு வாரங்களில், எதிர்பார்க்கப்படுகிறது. ஆம்! வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை குறித்த தமது திட்டவரைபை தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தக் காலத்துக்குள் வெளியிடுவர் என எதிர்பார்க்கப்படுவதால், இதனை முக்கிய கட்டம் எனக் குறிப்பிடலாம். இந்த முக்கியமான திட்டவரைபு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் சாணக்கியத்தை மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டப்போவதாக தென்னிலங்கையில் ஊகம் வெளியிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டவரைவு குறித்து தென்னிலங்கையில் வெளியிடப்படும் ஊகம் என்னவென்பதை இந்தக் கட்டுரையின் இறுதியில் தரலாம் என நினைக்கிறேன்.

அதற்குமுன்னர் தென்னிலங்கை அரசியலில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் நகர்வுகளைப் பார்ப்போம்.

கடந்தவாரப் பகுதியில் தென்னிலங்கை அரசியலில் இரண்டு பிரதான கட்சிகளுமே, தமது கட்சி நிலவரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, தமது அரசியல் குழுக் கூட்டத்தை இதற்காகக் கூட்டிய அதேநேரம், பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது இணைக்கட்சிகளை அழைத்துப் பேச்சுக்களை நடத்தியது. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் - பிரதமர் தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றபோது, அதற்கு எஸ்.பி.திஸநாயக்க, ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட உட்பட பல முக்கிய அமைச்சர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது, கட்சி தற்சமயம் எதிர்நோக்கியுள்ள சவால்கள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகள் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது. இறுதியில் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை தென்னிலங்கையில் தீவிரப்படுத்தி, அதற்கு தீவிர பிரசாரங்களைக் கொடுப்பது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் ஆரம்பப் பணி விரைவில் அம்பாந்தோட்டையில் இருந்து ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை - தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் தீவிர பிரசாரத்துக்கு உட்பட்டதும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரண்டாம்நிலை பலத்திற்கும் உட்பட்டது என்பதால், ஐக்கிய தேசியக் கட்சி இந்த மாவட்டத்தில் முக்கிய கவனத்தைச் செலுத்தியுள்ளது. இங்கு கட்சிப் பிரசாரத்தை முன்னெடுக்கும்போது, அதில் அரசாங்கத்தின் அனைத்து அமைச்சர்களும் பங்கேற்கவேண்டுமென, இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதேநேரம், பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகிச் சென்றுவிடக்கூடாது என்பதிலும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

முக்கியமாக ஒக்ரோபர் இறுதிவாரம் முதல, டிசெம்பர் இறுதிவரையான காலப் பகுதியில் எந்தவொரு அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக்கூடாது எனவும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஏன் இந்தக் காலம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது? ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி தமது இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறது. இந்த வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதன் இரண்டாம் வாசிப்பின் பின்னர், வாக்கெடுப்பு நடத்தப்படும் வேளையில் அதனைத் தோற்கடிப்பது என்ற முக்கிய நகர்வை பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்டு வருகிறது. இதன்காரணமாகவே முறித்துக்கொண்ட கூட்டமைப்பின் பேச்சுவார்த்தையைக்கூட புதுப்பித்து, மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்த அந்தக் கட்சி முயற்சித்து வருகின்றது.

அதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் அதிருப்தி நிலையைப் பயன்படுத்தி உறுப்பினர்களை குறிப்பாக பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கம் இழுக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. இதிலொரு கட்டமே அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவமாகும்.

பிரபல கல்லூரி ஒன்றின் பரிசளிப்பு விழா நடைபெற்றபோது, ஜனாதிபதி அதில் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார் எனினும், ஜனாதிபதி வழமைபோலவே சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தாமதமாகி வந்தமையால், அந்த நிகழ்வுக்கு வந்திருந்த அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஜனாதிபதியின் தாமதத்தை விமர்சித்ததன் பின்னர், அங்கிருந்து வெளியேறிவிட்டார்.



எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக மாத்திரம் தொடர்ந்து அங்கிருந்தார். இந்த நிலையில் ஜனாதிபதி அங்கு வந்து சேர்ந்தார். அவருடன் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுக்கமகேயும் அங்கு வந்திருந்தார். இதன்போது, தூண்டில்

# தென்னிலங்கை பிரதான அரசியல் கட்சிகள்!

ஒன்றை ஜனாதிபதி போடுவதற்கு அவருக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார் மஹிந்தானந்த அலுக்கமகே. கஜந்த கருணா திலக இளம் நாடாளுமன்ற உறுப்பினர். இவருக்கு ஏன் பிரதமர் அமைச்சுப் பொறுப்பு எதையும் வழங்கவில்லை என அவர் ஜனாதிபதியிடம் கேட்க, ஜனாதிபதி அதற்குப் பதிலளிப்பதை பெரிதாக விரும்பாதவர் போல இருந்தாலும், கஜந்த கருணாதிலகவை தமது பக்கம் இழுக்கும் வளியில் கருத்தொன்றை வெளியிட்டார். கஜந்த கருணாதிலக தமது அரசாங்கத்துக்கு ஆதரவளித்தால், அவரை முக்கிய அமைச்சுப் பதவியில் அமர்த்தலாம் எனக் கூறிய ஜனாதிபதி, கஜந்த விரும்பினால் இதனை ஆலோசிக்கலாம் எனக் குறிப்பிட்டார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதியைப் பார்த்து - "நீங்கள்தானே அமைச்சர்களை நியமிப்பதற்கு தடையை ஏற்படுத்தி வருகிறீர்கள். அவ்வாறெனில், எவ்வாறு எனக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும்?'' எனக் கேள்வி எழுப்பினார். இது ஜனாதிபதியைச் சற்றுச் சிந்திக்க வைத்துவிட்டது. உடனே, இல்லை எனக் கூறிய ஜனாதிபதி, பிரதமர் எத்தனை அமைச்சர்களை நியமித்தாலும் பிரச்சினை இல்லை. கூடுதலான அமைச்சர்கள் நியமிக்கப்படும்போதே ஊழல்கள் அதிகரிக்கும். எனது ஆளைப் பயன்படுத்தி நானும் உங்களுடைய அரசாங்கத்தை விரைவில் குலைத்து, மாற்று அரசு ஒன்றை அமைக்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். இதன்பின்னர் இருவர் மத்தியிலும் கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை.

இதற்கு மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் இழுத்துக்கொள்ளும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இதில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பிரதமரைச் சந்திப்பதற்கு அலரி மாளிகை சென்றனர். இவர்கள் அனைவரும் தமக்கு வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே பிரதமரிடம் சென்றனர். தமது தொகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்திப்பதற்கு வாகன வசதிகள் இல்லையென்பதால், வாகனங்களைப் பெற்றுத்தருமாறு பிரதமரிடம் இவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரின் வாசஸ்தலம் சென்றபோது, பிரதமர் அவர்களை மிகவும் விருப்புடன் வரவேற்றார். இதில் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கிரிக்கெட் அணித் தலவருமான அர்ஜுன ரணதுங்கவைப் பார்த்த பிரதமர், நகைச்சுவையாக அதுவும் நாடிபிடித்துப் பார்க்கும் வகையில் கேள்வி ஒன்றைத் தொடுத்தார்.

அர்ஜுன தற்சமயம் எந்தப் பக்கம் இருக்கிறீர்கள்? பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினரான நீங்கள், அண்மையில் பாதயாத்திரை ஒன்றில் நடந்து செல்வதைக் கண்டேன் எனப் பிரதமர் தனது கேள்வியை நியாயப்படுத்தினார்.

இதற்கு அர்ஜுன ரணதுங்க சிரித்துக் கொண்டே, பாதயாத்திரையில் நடந்துசென்றால் எனது உடம்பு கொஞ்சம் குறையும் என்பதால் அதில் பங்குகொண்டேன் எனக் கூறினார். இதன்பின்னர் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களைப் பெற்றுக் கொடுக்கலாம் எனப் பிரதமர் அவர்களுக்கு உறுதியளித்தார். சந்திப்பு முடிவடைந்து அனைவரும் சுமுகமாகக் கலைந்துசெல்கையில், இன்று இங்கு நடந்த சுமுகமான இருபக்க ஒத்துழைப்பு, தாம் முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கையிலும் இருக்குமானால், நாடாளுமன்ற உறுப்பினர்களான உங்களுக்கு வாகனம் மட்டுமல்ல, ஏனைய வசதிகளையும் செய்துகொடுக்கலாம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இவ்வாறு இருதரப்பும் தமது கட்சிக்கு அடுத்த கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, எப்படியாவது எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது குறித்து, பொதுஜன ஐக்கிய முன்னணி அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூட்டம் ஒன்றைக் கூட்டியது. இதில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை. இதனால் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கினார். ஐக்கிய நாடுகள் சபையில், ஈராக் தொடர்பாக பிரதமர் ஆற்றிய உரையை ஆட்சேபித்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவது குறித்து இங்கு ஆராயப்பட்டது. இந்த நிகழ்வின்போது தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். அதாவுல்லாவும் பங்குகொண்டு, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக கருத்துக்கூறியமை, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விடயமாக அமைந்துவிட்டது. இந்த நிலையில் ஏனைய தமது உறுப்புரிமை கொண்ட தமிழ் கட்சிகளையும் இணைத்துக்

# தெற்குத் திசையினிலே...

## கொழும்பிலிருந்து இந்திரஜித்

கொண்டு இந்தப் பிரேரணையை மன்றில் சமர்ப்பிப்பது எனவும், அதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் ஆலோசனை பெறுவது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உட்கட்சிப் பிரச்சினைகள் என்று சொல்லக் கூடியவைகளாக - அமைச்சர் மஹிந்த விஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டார். இதன்போது கட்சிக்குள்ளேயே தமது எதிரான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதாகவும், எனவே இதில் பிரதமர் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். தாம் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பின்னரே பணம் சம்பாதித்தாகக் கூறப்பட்ட கருத்தை மறுத்த அவர், ஏற்கனவே தாம் மேற்கொண்ட தொழில்களின் மூலம் அதிக பணத்தை சம்பாதித்திருப்பதாகக் கூறினார். பிரதமரின் மீது நம்பிக்கை வைத்து ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்ததாக குறிப்பிட்ட அவர், அவர் சொன்னால் வீட்டுக்கு போகத் தயார் எனவும் தெரிவித்தார்.

கட்சி மாற்றும் நடவடிக்கைகளில் ஒரு கட்டமாக மற்றும் ஒரு விடயமும் இடம் பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் சிலருக்கு ஜனாதிபதியின் தரப்பில் இருந்து தகவல் ஒன்று சென்றிருக்கிறது. நீங்கள் எமது புதிய அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினால், அந்த அரசாங்கத்தில் உங்களுக்கு உரிய இடம் தரப்படும் என்பதே அந்தத் தகவலாகும்.



இதில் சந்திப்பு இடம் பிரச்சினையாக இருக்குமானால் வாகனம் ஒன்றைத் தயார் செய்து பிடித்த வாகனத்துக்குள்ளேயே இருந்து பேசலமெனவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு இந்த விடயம் கசிந்து விட்டதால், அந்த முயற்சி அப்படியே கைவிடப்பட்டுவிட்டது. இந்தப் பின்வரிசை உறுப்பினர்களே தற்சமயம் இலக்காகியிருப்பதால் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து சமாதான மற்றும் அரசியல் தொடர்பான தெளிவாக்கல் நடவடிக்கைகளை அண்மையில் இரண்டாவது முறையாகவும் வழங்கியுள்ளது.

நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டங்கள் மக்கள் விடுதலை முன்னணியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதாகவே அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது. இந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பை பெரிதும் விரும்பாத எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறான போராட்டங்களில் அழைப்பு இல்லாமலேயே பங்கு கொண்டு வருகிறார். இது பொதுஜன ஐக்கிய முன்னணியில் தமக்கும் ஒரு இடத்தை அவர் பெற்றுக்கொள்ளும் முயற்சியாகவே கருதப்படுகிறது.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால திட்ட வரைபு எப்படி இருக்குமென தென்னிலங்கையில் பேசப்படும் விடயங்கள் குறித்து குறிப்பிட்டிருந்தேன். ஆம்! தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்ட வரைபு பொதுஜன ஐக்கிய முன்னணி 2000 ஆண்டு சமர்ப்பித்த திட்ட வரைபை ஒத்தநிலையில் கூடிய அதிகாரங்களைக் கொண்டு அதாவது, பொதுஜன ஐக்கிய முன்னணி இந்தத் திட்ட வரைபை நிராகரிக்க முடியாத வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதாக தென்னிலங்கையில் பரவலாக ஊகங்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறன திட்ட வரைபை தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பிப்பதன் மூலம் தென்னிலங்கையின் பிரதான இரண்டு கட்சிகளும் தீர்வு ஒன்றுக்கு இணங்கி வரும் நிலையை ஏற்படுத்தக் போகின்றனர் எனவும் தென்னிலங்கையில் கருத்துக்கள் நிலவுகின்றன.

எது எப்படியெுன்பது தமிழீழ விடுதலைப் புலிகள் தமது திட்ட வரைபை அரசாங்கத்திடம் சமர்ப்பித்த பின்னரே தெரியவரும் அது வரை ஊகங்களுக்கே முதலிடம்.

# திருமறைக் கலாமன்றத்தினின் நாடகவிழா நாடளாவிய ரீதியில்!

திருமறை கலாமன்றம் நாட்டின் பல பாகங்களிலும் கலைநிகழ்வுகளை ஒழுங்குசெய்துள்ளது. மட்டக்களப்பு திருமறை கலாமன்றத்தினர், நாடக ஆசிரியர் வில்லியம் சேக்ஸ்பியரின் ஒதல்லோ நாடகத்தைத் தமிழாக்கம் செய்து 'மலர்ந்தும் மலராத ரோஜா' என்னும் பெயரில் இன்று மேடையேற்றவுள்ளனர்.


மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசியப் பாடசாலைக் கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் காலை 10 மணிக்கு மாணவர்களுக்கும், மாலை 5 மணிக்குப் பொதுமக்களுக்குமாக இந்த நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

இதேவேளை மலையக திருமறை கலாமன்றத்தினர் தீபாவளி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி பண்டாரவளை நகர சபை மண்டபத்தில் கலை விழாவொன்றை நடாத்தவுள்ளனர். இதில் நாடகம், கோலாட்டம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (111)

# தலை ஒட்டிப் பிறந்த சிறுவர்களை பிரிக்கும் சத்திரசிகிச்சை ஆரம்பம்!

## அமெரிக்காவிலுள்ள வைத்தியசாலையில் நடைபெறுகிறது





எகிப்தைச் சேர்ந்த இரண்டு வயதான தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பிரிப்பதற்கான கடினமான சத்திர சிகிச்சை நேற்றுக்காலை தொடககம் தொடர்ச்சியாக 48 மணித்தியாலங்கள் அமெரிக்க மாநிலமான ரெக்ஸாஸிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவர்களது சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற தெய்வ ஆசிவேண்டி எகிப்தில் இப்பாலகர்கள் பிறந்த ஊரிலுள்ள மக்கள் பிரார்த்தனை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் குழந்தைகளுக்கு மூளை தனித்தனியாக இருந்தபோதும், இருவரது மூளைக்கும் ரத்தம் வழங்கும் குழாய் ஒன்றாகவே உள்ளது.

இக்குழந்தைகள் கண்ணை மூடுவதற்கும், கழுத்தை திருப்புவதற்கும், உணவை விழுங்குவதற்கும் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதனாலேயே இவர்களைப் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

தன் குழந்தைகளுக்கு சுமுகவாழ்வை ஏற்படுவதற்கு- அவர்களை பிரிப்பதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறு, இந்த இரட்டைக்குழந்தைகளின் தந்தை வைத்தியர்களைக் கேட்டுள்ளார்.

இந்தப் பாலகர்களை பிரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் முகமாக, ஒருவயதிலேயே இவர்கள் தற்போது சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். இவர்களுக்கான மருத்துவச் செலவுகளை 'கிறேனியோவேசியல் பவுண்டேசன்' எனும் அமைப்பு ஏற்றுள்ளது.

இதேவேளை, இப்பாலகர்களின் தலைப்பகுதியில் உள்ள தசைகளைப் பிரிப்பதில் எதுவித சிரமமும் இல்லையென்னும், எனினும் இரத்தக் குழாய்கள் சரியான முறையில் பிரிக்கப்படாவிட்டால் - இந்தக் குழந்தைகள் இறப்பதற்கு சந்தர்ப்பம் உண்டு எனவும், வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வயது குறைந்தவர்களாதலால் - இவர்களது எலும்புகளும், இழையங்களும் மென்மையானதாக இருப்பதால் - சத்திர சிகிச்சையின்போது அதிக சிக்கல்கள் ஏற்படாது எனத் தாம் நம்புவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த ஜுலை மாதம் சிங்கப்பூர் வைத்தியசாலையில் நடைபெற்ற இவ்வாறான சத்திரசிகிச்சை ஒன்றின்போது ஈரானைச் சேர்ந்த ஒட்டிப்பிறந்த லாலே, லாடன் பிஜானி என்ற இரு இளம் யுவதிகள் மரணமானது தெரிந்ததே.


### சிறுவிளம்பரம்

5 மொடேன் மில்க்வைற் நீல சோப் அல்லது பவர்சோப் மேலுறைகளை அனுப்பி திருவெம்பாவை, சகலகலாவல்லிமாலை, கந்தசஷ்டி கவசம் ஏதாவது ஒரு நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப்
இண்டஸ்ரியல்ஸ்.
527, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1658)

2004 ஆம் ஆண்டு கலண்டரை பெற்றுக்கொள்ள இன்றே மொடேன் மில்க் வைற், பவர் சோப் மேலுறைகளை சேகரியுங்கள்.

**மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்**
**527, கே.கே.எஸ் வீதி**
**யாழ்ப்பாணம்** (சி-1672)


### இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலுக்கு அனான் கண்டனம்

நேற்றுமுன்தினம் இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீன அகதிமுகாம் மீது மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு, ஐ.நா. செயலர் கோபி அனான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இவ்வாறான தாக்குதல்களை நடத்துவது சர்வதேச சட்டங்களை மீறும்செயல் என அவர் தெரிவித்துள்ளார்.


# சாவகச்சேரி நகரசபை

## 2004ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01. 01. 2004 ஆம் திகதி தொடக்கம் 31. 12. 2004 வரையான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம்/ வேலைகளுக்கான கேள்விகள் உரிய கட்டணங்களை இவ் அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் பூர்த்திசெய்யப்பட்ட இணைப் பிரதிகள் 30. 10. 2003 ஆம் திகதி காலை 10. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| விபரம் | கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூ ச | கேள்வி வைப்பு ரூ ச | படிவக் கட்டணம் (மீளளிக்கப்படமாட்டாது) ரூ ச |
|---|---|---|---|---|
| **அ.வியாபாரம்** | | | | |
| 1. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ் 1 | 100000 . 00 | 1000 . 00 | 200 . 00 பெறுமதிசேர் வரி 20% |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ் 2 | 100000 . 00 | 1000 . 00 | 200 . 00 " |
| 3. மாட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ் 3 | 150000 . 00 | 1000 . 00 | 200 . 00 " |
| 4. மாட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ் 4 | 150000 . 00 | 1000 . 00 | 200 . 00 " |
| **ஆ.சேவைகள்** | | | | |
| குப்பை கூளங்களை அகற்றுதல் உழவு இயந்திரம் பெட்டியுட்பட வாடகைக்கு விடுதல். நாள் ஒன்றுக்கு | | | 1000. 00 | 200. 00 |

கேள்விப் பத்திரங்கள் 29. 10. 2003 ஆம் திகதி நண்பகல் 12. 30 மணிவரை வழங்கப்படும். குறித்த திகதிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

கேள்வித் தொகையுடன் பெறுமதிசேர் வரி 20% சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் - அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**நகரசபை அலுவலகம்,**
**சாவகச்சேரி,**
**10.10.2003.**

(சி-1673)

**மு.செ.சரவணபவ**
**செயலாளர்,**
**நகரசபை, சாவகச்சேரி**





ஈழநாட்டில் நீர் கொட்டிய குப்பை போதாது என்று, நமது ஈழநாட்டிலும் இப்போது குப்பை கொட்டுகிறீரா என்று, உமது பழைய நண்பர் ஒருவர் உம்மைக் கிண்டல் செய்ததாக எழுதியிருந்தீர்.

குப்பையை இலேசாக அவரும் நினைத்துச் சொன்னார். நீரும் அதைக் கிண்டலாகவே எடுத்துக் கொண்டிருக்கிறீர்.

சிலவருடங்களுக்கு முன்னர் - காலையிலேயே பொலித்தீன் பைகளுடன் சிலர் வீதி வீதியாகச் சென்று கொண்டிருப்பார்கள். முற்றவெளி, திரைப்பட மாளிகைகள், கடைத்தெரு, ஆலய வீதிகள் ஆகிய இடங்களில் இவர்கள் சுற்றித் திரிவார்கள். இங்கு வீதியோரங்களில் அங்குமிங்கும் கிடக்கும் கழிவுக் கடதாசிகளை பொறுக்கித் தங்கள் பொலித்தீன் பைகளை நிரப்புவார்கள். நாட்டின் பல பாகங்களிலும் இப்படிக் குப்பைகளைப் பொறுக்கும் பலரை நான் பார்த்திருக்கிறேன். இந்தக் கழிவுக் கடதாசிகளை கிலோக்கணக்கில் வாங்குவதற்காக ஆங்காங்கே சில நிலையங்கள், கடைகள் இருக்கின்றன. இவர்கள் கழிவுக்கடதாசிகளை கிலோக்கணக்கில் வாங்கித் தெரிவுசெய்து அடுக்கிக் கட்டுவார்கள். பின்னர், இவை லொறிகளில் தொன் கணக்கில் வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு விற்கப்படும். அங்கு இந்தப் பழைய கழிவுக் கடதாசிகள், மீண்டும் புதிய கடதாசிகளாக உருப்பெற்றுப் பாவனைக்கு விடப்படும்.

வெளிநாடுகளிலும் இப்படிக் கழிவுக் கடதாசிகளை மீண்டும் புதிய கடதாசிகளாக உருப்பெற்று உற்பத்தியாகின்றன. ஆனால் ஒரு வித்தியாசம் - இங்குபோல் பொலித்தீன் பைகளைக் காவிக்கொண்டு வீதிவீதியாகக் கடதாசிகளைப் பொறுக்கித் திரிவதில்லை. அப்படிப் பொறுக்குவதற்கும் அங்கு வீதிகளில் குப்பைகளைக் காணமுடியாது.

வெளிநாடுகளில் குடியிருப்புக்களில் - அடுக்குமாடிக் குடியிருப்புக்களானாலும், ஒற்றை வீடுகள் கொண்ட குடியிருப்புகளானாலும் குப்பைகள் போடுவதற்கு, குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். இங்குபோல் திறந்தபடி சீமெந்தினால் குப்பைத் தொட்டிகள் கட்டப்பட்டு - காகம், நாய், பூனை, ஆடு, மாடுகளும் அவற்றைக் கிண்டிக்கிளறி வெளியே வீழ்த்தி நாற்றமெடுக்கச் செய்வதுடன், வீட்டுக்காரர்கள் குப்பைகளைக் கொண்டுபோய் தொட்டிக்கு வெளியே வீசி நாற்றமுண்டாக்குவது வழமை. மேல்நாடுகளில் குப்பைத் தொட்டிகள் யாவும் மூடிகளுடனேயே இருக்கும். அவற்றைத் திறந்து குப்பைகளைப் போட்டு மூடிவிடவேண்டும். இந்த வேலை ஒரு நொடியில் முடிந்துவிடும்.

குடியிருப்பிலுள்ள வீடுகளிலுள்ளோரிடம் அடுக்களையில் அல்லது வெளியில் குப்பைப் பெட்டிகள் இரண்டு அல்லது மூன்று இணைந்தே இருக்கும். இவற்றின் கீழே அலகு ஒன்று நீட்டிக் கொண்டிருக்கும்.

அதைக் காலால் அமத்தியதும் மேலே வாய் திறக்கும். இதனுள் குப்பைகளைக் கொட்டவேண்டும். அதுவும் தெரிந்தெடுத்துப் போடவேண்டும். எல்லாவற்றையும் குப்பைதானே என்று போடமுடியாது. தகரங்கள், போத்தல்கள் தனியாக ஒரு பகுதியிலும், கடதாசிகள் போன்றவை வேறு தனியாகவும் போடவேண்டும். பெரிய தொகையான பொருள்கள் கழிக்கவேண்டுமாயின் (இங்கு வாழை, பப்பாளி மற்றும் விலைக்கு விறகாக விற்கமுடியாத மரங்கள் யாவும் வீட்டுப் பாவனைக்கு வெளியே கொட்டிக் குவிப்பது போல போடமுடியாது.) உள்ளூராட்சிச் சபையின் சுகாதாரப் பகுதியினருக்கு அறிவித்தால் அவர்கள் வெளியே போடச் சொல்லும் நேரத்தில் - வெளியே போட்டதும், வந்து எடுத்துச் செல்வார்கள்.

குப்பைத் தொட்டிகளில் தரம் பிரித்துப் போடப்படும் பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டு அங்கும் தரம் பிரித்து வெவ்வேறு விதமாக மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.

குப்பைகளிலிருந்து சில நாடுகளில் மின்சாரம் உற்பத்தி செய்யவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

குப்பைகளிலிருந்து விவசாயத்துக்குத் தேவையான உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. (இங்கு நாமும் நமது வளவுகளில் சேரும் குப்பைகளைச் சேர்த்து இயற்கை உரம் தயாரிக்கலாம். வீட்டுப் படலைக்கு வெளியே வீசும் குப்பைகளைச் சேர்த்து உரமாக்கலாம்.)

பொலித்தீன் பைகள் பாவனைக்கு வந்தபின்னர், இயற்கை உரமும் உற்பத்திசெய்ய முடியவில்லை. மண்ணும் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த முடியாமலுள்ளது என்று, ஒரு விவசாயி கவலையுடன் கூறுகிறார்.

பொலித்தீன் பாவனை நாட்டுக்குக் கேடு என்று அதற்கு முதலில் வன்னியில் தடைசெய்து இலங்கைக்கு வழிகாட்டியவர்கள் விடுதலைப் புலிகள். இப்பொழுது சிறிலங்காவும் பொலித்தீன் பாவனைக்குத் தடைவிதிக்க முனைந்திருக்கிறது. வாழ்க!

குப்பைகள் என்று மட்டரகமாகக் கேவலமாகப் பேசக்கூடாது. குப்பைக்குள்தானே குன்றுமணி கிடக்குமாம் என்றார் நண்பர்.

சரியான வழிகாட்டிகள் இருந்தால், எல்லாமே துலங்கும். யாவுமே வெற்றிதான் என்றேன். அவர் சிரித்துக்கொண்டே அர்த்தமுள்ள வார்த்தைதான் என்றபடி நடந்தார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த
தூள்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
Tuhedo
(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.
பிரசாந், கிரண், நடித்த
வின்னர்
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1619)

பார்வையில் பழுதுண்டா?
பற்களில் பழுதுண்டா?
பயம் எதற்கு?
பொங்கிடும் பார்வையை பெற்றிடவும் உறுதியான
அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிடவும்
**எரிக்கணேஷ்**
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல. 80 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்
இல. 91 கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி கொக்குவில்.
மூக்குக் கண்ணாடியகமும்,
பல்கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
T.P. 2486
(சி-1670)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வருட இறுதிக்குள் பதவியுயர்வு வழங்கப்படும்!

## கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ஆசிரியர்களுக்கு, இந்த வருட இறுதிக்குள் பதவியுயர்வு வழங்குவதுடன், சம்பள நிலுவைப்பணமும் வழங்க, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கென, அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அறிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று, அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைபவமொன்று - கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியத் தொழிலுக்கான அந்தஸ்தை உத்தரவாதம் செய்வதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது என்று, அமைச்சர் கூறினார்.

பிரிவேனா கல்வி நிலையங்களிலும், கட்டணம் அறவிடப்படாதுள்ள தனியார் கல்வி நிலையங்களிலும் கற்கும் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள் - அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறார்கள் என்று, அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (03)

# கண்காணிப்புக்குழுவிற்கு புதிய ஆலோசகர் நியமனம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு புதிதாக அரசியல் ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நோர்வே நாட்டைச் சேர்ந்த ஜெசெல் ஜெனி என்பவரே ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர், நேற்றுமுன்தினம் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள தமிழ் அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த அவர், ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ். கட்சிகளின் பிரதிநிதிகளை தனியாகவும், புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளையும் வேறாகச் சந்தித்து உரையாடியுள்ளார்.

விடுதலைப் புலிகளும், தமிழ் கூட்டமைப்பினரும் - இராணுவம் மற்றும் அரச படைகளினால் மேற்கொள்ளப்படும் பிரச்சினைகளையும், ஏனைய அரசியல் கட்சிகள் தமது பிரச்சினைகளையும் எடுத்துரைத்தனர்.

கண்காணிப்புக்குழுவின் அரசியல் ஆலோசகர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

# அமெரிக்க வர்த்தக அதிகாரிகள் அடுத்த வாரம் இலங்கைக்கு!

அமெரிக்க வர்த்தக அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு வரவிருக்கிறது.

இரண்டு நாடுகளுக்கிடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பற்றி ஆராய்வது இதன் நோக்கம் என, அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தகம் தொடர்பான இலங்கையின் முயற்சிகள், எதிர்பார்ப்புக்கள் என்பன பற்றிக் கேட்டறிந்து கொள்வது இவரது விஜயத்தின் முக்கிய நோக்கம் என, அந்த நாட்டின் துணை வர்த்தகப் பிரதிநிதி தெரிவித்தார். இரண்டு நாடுகளும் கடந்த ஆண்டு வர்த்தக முதலீட்டு உடன்படிக்கையை உருவாக்கியிருந்தன. (01)

# கூட்டமைப்பு பிரதமரைச் சந்திக்கும்!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாளை மறுதினம் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளது. இதன்போது, அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயம தொடர்பாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மட்டுமே கடுமையான நிலையை பின்பற்றுவதாக கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர்.

## வவுனியா வைத்தியசாலையில் கைக்குண்டுகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையிலுள்ள கைவிடப்பட்ட கட்டடத்துக்குள்ளிருந்து, நான்கு கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் குண்டுகள் புதியவையாகக் காணப்பட்டதனால், இராணுவத்தினர் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

## ஜனாதிபதி சந்திரிகா சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா இன்று சிங்கப்பூருக்குப் பயணமாகின்றார்.

கிழக்காசிய பொருளாதார மாநாட்டில் பங்குபற்றுவதற்காகவே அவர் இன்று சிங்கப்பூர் செல்கின்றார். உத்தியோகபூர்வமாக இவர் - சிங்கப்பூர் ஜனாதிபதி எஸ்.எஸ்.நாதன், பிரதமர் கோஷோக் டொங் முன்னாள் ஜனாதிபதி லீ குவான் யு ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகத்திலிருந்து...

நாடு திரும்பிய அகதிகள் அனைவரும் - மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ய,ச,ம)

# மீளக்குடியமர்ந்த அகதிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி

இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் - உணவுப் பொருட்களல்லாத அத்தியாவசியப் பொருட்களை வழங்கவுள்ளது.

இடம்பெயர்ந்து மீளக்குடியேறும் மக்களுக்கான உடனடி மனிதாபிமான உதவித்திட்டம் என்ற மனிதநேய அடிப்படையில், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் 2500 ரூபாவுக்கு உட்பட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது நெடுந்தீவில், இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியேறி, எதுவித அடிப்படை வசதிகளுமற்று இருக்கும் சுமார் ஐம்பது குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பாய், வாளி, போர்வைகள், சமையல் பாத்திரங்கள், இலாந்தர்கள் போன்ற மேலும் பல பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜே.வி.பி.-சுதந்திரக்கட்சி...

புவதாக அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு முறையே பொருந்தமான தீர்வாகும் என்ற கருத்தை எஸ்.டபிள்யூ பண்டாரநாயக்க கொண்டிருந்தார்.

சமஷ்டி நிர்வாக முறைமை ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அமுல்செய்வதற்குக் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா முயற்சி மேற்கொண்ட பொழுது இனவாத சக்திகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

எவ்வாறாயினும், அந்த ஒப்பந்தம் அமுல்செய்யப்பட்டிருந்தால் இன்று இனப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

அமெரிக்கா - ஈராக்மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு; பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியதைக் குறிப்பிட்ட அவர் சமாதான முயற்சிகள் தோல்வி அடைந்தால், விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்காவின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் இவ்வாறு தெரிவித்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

# செய்தியாளர்கள் தாக்கப்பட்ட...

நோக்குடனும், ஊடகவியலாளர்களை பயமுறுத்தி உண்மைகளை வெளிவராமல் தடுக்கும் நோக்குடனும் இவர்களின் காடைத்தனமான நடவடிக்கைகள் அரங்கேறி வருகின்றன. இத்தகையவர்களின் செயல்கள் சமாதானத்தையும் நல்லுறவையும் விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிக்க எம்முடன் அணிதிரளும்படி வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இது முதல் தரம் அன்று. பத்திரிகைகளில் கண்டன அறிக்கைகளை விட்டவுடன் படையினர் தமது வன்முறைகளை நிறுத்திக்கொள்ளப் போவதில்லை. ஆகவே, இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருக்க ஏற்ற நடவடிக்கைகளை ஊடகவியலாளர் மட்டுமல்ல, மக்கள் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஒன்று திரண்டு கண்டிக்க முன்வரவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

இது தொடர்பாக ஆர்.எஸ்.எப் நிறுவனத்துடன் நாம் தொடர்புகொண்டு ஏற்ற நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு தொலைநகல் மூலம் வேண்டியுள்ளோம் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, இன்று கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக மறியற்போராட்டம் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(202,9)

# பொதுமக்களுக்கு ஆத்திரம்...

தெரிவிக்கையில் -

ஏற்கனவே பலதடவை எமது வருத்தத்தையும், கண்டனத்தையும் இது தொடர்பாக தெரிவித்திருந்த போதும், படைத்தரப்பு நிலைமையை மேலும்மேலும் மோசமாக்கும் நிலைப்பாட்டையே எடுத்துவருகிறது.

மடத்தடிச் சந்தி, கச்சாய், நாவாந்துறை, நெல்லியடி என, தொடர் விபத்துக்களால் மக்கள் பாதிப்புறுவது ஒருபுறம், தவற்றைச் சுட்டிக்காட்ட முனையும்போது - கண்ணீர்ப்புகைக் குண்டு, துப்பாக்கிச்சூடு, தடியடி என மக்களது உணர்வுகளை மதிக்காது தாக்கி, அச்சுறுத்துவது மறுபுறம்.

மேற்கூறியவாறான சம்பவங்கள்- மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாகவும், மக்கள் வீதியில் நடமாடுவதற்கு அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது. தமது தெருக்களில் அன்றாட அலுவல்களை நிம்மதியாக அச்சமின்றி ஆற்றமுடியாத மக்கள், தமது உரிமைக்காக கொந்தளிப்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ஆனால், மேலும் பாதிப்புக்கள் தொடர விடப்படக்கூடாது என்பதில் மக்கள் மாற்றுக் கருத்துக்கள் ஏதுமின்றி ஒன்றுதிரண்டு தம்மால் இயன்ற எதிர்ப்புக்களைக் காட்டுகிறார்கள்.

மக்கள் உணர்ச்சி மேலீட்டாலும், பாதிப்புக்களால் ஏற்பட்ட உள்ளக் கொதிப்பாலும், தமது எதிர்ப்பை வலுவாகக் காட்டுகின்றனர். பாதிப்பை உண்டுபண்ணியோரையும், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவோரையும் நேரடியாகத் தாக்கமுற்படுகின்றனர்.

இந்த விடயத்தில் படைத்தரப்பு- மக்களின் கொதிப்பை மேலும் கிளறும் விதமாக ஆயுதப் பிரயோகம், தடியடி, கண்ணீர்ப்புகைத் தாக்குதல் எனவும் பெரியளவில் படையினரை அந்தப் பிரதேசத்தில் குவித்து, அந்தப்பிரதேசத்தை இராணுவ மயமாக்குவதும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலே. அத்தோடு, மக்களின் நடமாட்டத்தை முடக்கும் மோசமான மனித உரிமை மீறலும் ஆகும்.

இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது இருப்பதை மனித உரிமை ஆணைக்குழுவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் இவ்வாறான அத்துமீறல்களும், அடாவடிகளும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பவல் கவசவாகனம் ஓட்டோவை...

இந்த நிலையில் அப்பகுதிக்கு பெருமளவு படையினரும், பொலிஸாரும் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர்.

இதையடுத்து - விபத்துக்குள்ளான ஓட்டோவையும், பவல் கவச வாகனத்தையும் படையினர் அகற்ற முற்பட்டபோது, பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

### படையினர் மீது கல்வீச்சு

பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி - படையினரும், பொலிஸாரும் விபத்துக்குள்ளான வாகனங்களை அகற்ற முற்பட்டபோது, இராணுவத்தினர் மீது கற்களையும், போத்தல்களையும் வீசி பொதுமக்கள் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து, இங்கு குவிக்கப்பட்டிருந்த படையினரும் பொலிஸாரும் பொதுமக்கள் மீது தடியடிப்பிரயோகம், கண்ணீர் புகைக்குண்டு வீச்சு ஆகியவற்றை மேற்கொண்டதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

### பொது மக்கள் மீது படையினர் தாக்குதல்

அத்துடன், நீண்ட பொல்லுகளுடன் காணப்பட்ட படையினர், கண்மூடித்தனமான முறையில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர்.வீதியால் சென்றுகொண்டிருந்தவர்கள், செய்தி சேகரிக்கச்சென்ற செய்தியாளர்கள் தாக்குதலுக்குள்ளாகினர். விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்த வீடுகளுக்குள் புகுந்த படையினர் ஆண்களையும் பெண்களையும் தாக்கியதாகத் தெரியவருகிறது.

### கண்காணிப்புக் குழு தலையீடு

மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, இந்தப் பகுதிக்கு கண்காணிப்புக் குழுவினர் சென்று நிலைமையை சுமுகமாக்க முயன்ற போதும், அவர்கள் முன்பாகவே பொதுமக்கள் தாக்கப்பட்டனர். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் கண்காணிப்புக் குழுவின் வாகனத்தையும் கற்களை வீசித் தாக்கினர். இதனால் கண்காணிப்புக் குழுவினரின் வாகனத்தின் கண்ணாடியும் சேதமடைந்தது.

பொதுமக்கள் எதிர்ப்பு அதிகரித்ததையடுத்து அந்தப் பகுதிக்கு மேலதிக படையினர் கொண்டுவரப்பட்டு, வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசியும் பொதுமக்களை விரட்ட முற்பட்டனர்.

ஆயினும் படையினருக்கெதிராக ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் ஆக்ரோஷமான முறையில் தாக்குதலை மேற்கொண்டனர்.

### பல இளைஞர்கள் கைதாகினர்

பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்திய படையினர் அந்தப் பகுதியில் காணப்பட்ட இளைஞர்களையும், வீதியால் சென்றுகொண்டிருந்தவர்களையும் துரத்திச் சென்று, கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தி, ட்ரக் வண்டியில் ஏற்றிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் படையினரால் ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

### விபத்தில் காயமடைந்தோர்

நேற்று மாலை இடம்பெற்ற மோதல் சம்பவங்களில், படையினர் மற்றும் பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்தோர் விபரம் வருமாறு:

வலம்புரி செய்தியாளர் க.இதயபவன் (வயது 21), கனகரட்ணம் சந்திரன் (வயது 21, முள்ளி அரியாலை), இராமநாதன் இராமதீசன் (வயது 23, அரியாலை), பாலசுந்தரம் டயனீதரன் (வயது 21, அரியாலை), மகாலிங்கம் பகீரதன் (வயது 27, அரியாலை) ஆகியோரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் எஸ்.ரம்புக்வெல (வயது 49, கண்டி) என்ற பொலிஸாரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

காயமுற்றவர்களான டயனீதரன் மற்றும் ராம்தீசன் ஆகியோர், மாலை ஆறுமணியளவில் படையினரின் தாக்குதலுக்குள்ளான நிலையிலும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட போதிலும் இரவு எட்டு மணியளவிலேயே யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

### இரவுவரை பதற்றம் நீடிப்பு

மாலை 5.30 மணியளவில் ஆரம்பித்த மோதல்கள் இரவு 8.30 மணிவரை நீடித்தது. இந்த மோதல்களால் கண்டிவீதியூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது.

பெருமளவில் குவிக்கப்பட்டிருந்த படையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்ததால், இரவு அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கியிருந்தனர்.

இந்த சம்பவத்தின்போது அப்பகுதியில் காணப்பட்ட சைக்கிள்களையும் படையினர் அடித்து நொருக்கினர்.

நேற்றிரவு ஆங்காங்கே பொதுமக்கள் குழுமி நின்று படையினருக்கு எதிராக கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். வீதியில் ரயர்கள் போட்டு எரித்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

### செய்தியாளர்கள் மீது தாக்குதல்

நேற்று மாலை அரியாலை மாம்பழம் சந்திக்கருகில் நடந்த சம்பவத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களும் படையினரால் தாக்கப்பட்டனர். அத்துடன் செய்தியாளர்களின் புகைப்படக்கருவிகளும் படையினரால் பறிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன. உதயன் செய்தியாளர் சி. பார்த்தீபன், வலம்புரி செய்தியாளர், க.இதயபவன் (வயது 21), தினக்குரல் செய்தியாளர் எஸ்.சிவபாலன் (வயது 23) ஆகியோரே படையினரால் தாக்கப்பட்டவர்களாவர். ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையிட்டு இன்று காலை 10. மணிக்கு யாழ். ஊடகவியலாளர் சங்கம், வட இலங்கைப்பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகியன யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக மறியற் போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

(55,ச,ய)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.